University of Jaffna Sri Lanka
RECEIVED
1989-6-12
Periodicals Division
Library

விலை ரூபா 3-00

# ஈழநாடு

THE EELANADU
'NATIONAL TAMIL DAILY'

மலர்: 31 | வைகாசி 29 | துல்ஹஜ்தா 6 | இதழ் 24
யாழ்ப்பாணம் | ஞாயிற்றுக்கிழமை | 11-06-1989

## ரூ. 10கோடி போதைவஸ்து
### ஜமுனா நதிக்கரையில் எரிக்கப்பட்டது

(புதுடில்லி)
1500 கிலோவுக்கு மேற்பட்ட போதைவஸ்துக்களை, டில்லிப் பொலிஸார் நேற்று முன்தினம் பொதுமக்கள் முன்னிலையில் வைத்து எரித்தனர்.

போதைவஸ்துக் கடத்தல்காரர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட 10 கோடி ரூபா

(8-ம் பக்கம் பார்க்க)

## மூன்றுமட்டங்களில் உயர்குழு பரிசோதனைகள்

(சுன்னாகம்)
பாடசாலைகளுக்கு திடீர் விஜயம் செய்து மேற்கொள்ளப்படும் உயர்குழுப் பரிசோதனைகள் மூன்று மட்டங்களில் நடைபெற இருப்பதாக அறியப்படுகிறது.

பாடசாலை மாணவர்களின் கல்வியில் மேம்பாடு காணவும், அதிபர் ஆசிரியர்கள் தத்தமது கடமைகளை பூரணமாகச் செய்யவும் கொத்தணி, கோட்ட, மாவட்ட மட்டங்களில் குழுப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட இருக்கின்றன.

முன் அறிவிப்புக் கொடுக்காத வகையில் செவ்வாய், வியாழன் ஆகிய தினங்களில் மாவட்ட மட்ட குழுப்பரி

(8-ம் பக்கம் பார்க்க)

## படையினர் பாதுகாப்புச் சட்டம்
# சர்வதேச மன்னிப்புச்சபை கண்டனம்!

(லண்டன்)
இலங்கையில் அமுல்படுத்தப்பட்டுள்ள படையினரைப் பாதுகாக்கும் சட்டம்மூலம், கைதானவர்கள், தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்கள், காணமல் போனவர் குறித்து விசாரணைகள் மேற்கொள்வதில் பெரும்தடங்கல் ஏற்பட்டுள்ளதாக சர்வதேச மன்னிப்புச்சபை கவலை தெரிவித்துள்ளது.

படையினரைப் பாதுகாக்கும் சட்டம் குறித்துச் சர்வதேச மன்னிப்புச் சபை வெளியிட்டுள்ள அறிக்கையில் அதன் கவலையைத் தெரிவித்திருக்கிறது.

சம்பந்தப்பட்ட சட்டம் குறித்து அறிக்கை தெரிவிக்கும் மேலதிக விபரம் வருமாறு:

1977ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதல் 1988ம் ஆண்டு டிசம்பர் மாதம் 16ந் திகதி வரை இலங்கையில் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல் செயல்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்வதற்குப் படையினர் பாதுகாப்புச் சட்டம் தடையாக இருக்கும்.

காணமற் போனவர்கள் தொடர்பாகச் சம்பந்தப்பட்டவர்களின் குடும்பத்தவர் தாக்கல் செய்திருக்கும் ஆட்கொணர்வு மனுக்கள் சம்பந்தமான விசாரணைகளையும் சட்

(8-ம் பக்கம் பார்க்க)

## கடமை செல்லாத ஊழியர் சம்பளம் நிறுத்தப்படும்?

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணத்திலுள்ள அரசு அலுவலகங்களில் தொடர்ந்து கடமைக்குச் செல்லாத ஊழியர்களுக்குரிய சம்பளத்தை நிறுத்துவதுபற்றி ஆலோசிக்கப்பட்டுவருகிறது.

(8-ம் பக்கம் பார்க்க)

## முறைசாராக் கல்வி
# தொழிற்துறை பயிற்சிநெறி
### விண்ணப்பம் கோரப்படுகிறது

(யாழ்ப்பாணம்)
யாழ். கல்வித் திணைக்களத்தால் நடத்தப்படும் முறைசாராக்கல்விப் பகுதியில் பல தொழில்துறைப் பயிற்சிநெறிக்கு வெற்றிடங்கள் ஏற்பட்டுள்ளதாக கல்வி அதிகாரி (தொழில் நுட்பம்) ச. சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

ஆங்கிலதட்டெழுத்து, மின் உபகரணம் திருத்துதல், விவசாய விஞ்ஞானம், மோட்டார் கார் திருத்துதல், மேசன் தொழில், புத்தகம் கட்டுதல் பனையோலை உற்பத்தி, ரக்டர் திருத்துதல், வாகன மின் இணைப்பு, தமிழ்தட்டெழுத்து வானொலி பேணல், தொலைக்

(8-ம் பக்கம் பார்க்க)

# ஆசிரியர்கள் தாக்கப்பட்டனர்

(மருதங்கேணி)
பளை கொத்தணியில் உள்ள மாசார் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் வைத்து இரு ஆசிரியர்கள் தாக்கப்பட்டதாகப் புகார் செய்யப்

(8-ம் பக்கம் பார்க்க)

## கிரனேட்வீச்சு: சிலர்காயம்

(யாழ்ப்பாணம்)
தென்மராட்சிப் பகுதியிலுள்ள கச்சாய் என்னுமிடத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கிரனேட் வீச்சு சம்பவத்தில் சிலர் காயமடைந்துள்ளதாகத்தெரிய வருகிறது.

இந்தக் கிரனேட் வீச்சு சம்பவத்தைத் தொடர்ந்து இப்பகுதிகளில் சரமாரியான துப்பாக்கிச் சூட்டுச்சத்தங்கள் கேட்டன.

## மாமுனை மக்கள் சொந்த இடம் திரும்புகிறார்கள்

(மருதங்கேணி)
மாமுனைமக்கள் தமது இருப்பிடங்களுக்கு இப்பொழுது திரும்பிக் கொண்டிருக்கிறார்கள்.

கடந்தவாரம் இப்பகுதியில் இடம்பெற்ற சம்பவங்களைத் தொடர்ந்து மாமுனைமக்கள் செம்பியன்பற்று, மருதங்கேணி, உடுத்துறை ஆகிய இடங்களுக்கு இடம் பெயர்ந்தது குறிப்பிடத்தக்கது.

## ஏழு மாணவர்கள் கைது
### அநுராதபுரத்தில் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)
அநுராதபுரம் பகுதியில் பாடசாலை மாணவர்கள் ஏழுபேர் நேற்று முன்தினம் பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்டதை அடுத்து இப்பகுதியில் பெரும் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றுவருவதாகக் கூறப்படுகிறது.

இந்திய அமைதிப் படையை வெளியேறக் கோரும் சுவரொட்டிகளுடன் இலங்கை அரசுக்கு எதிரான சுவரொட்டிகளையும் இவர்கள் ஒட்டியதாகவும், இரு வெடிகுண்டுகளை வைத்திருந்ததாகவும் கூறியே இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனராம்.

இதேவேளை, தென்பகுதியில் இடம்பெற்றுவரும் ஆர்ப்பாட்டத்தில் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பத்துக்கும் மேற்பட்ட பஸ்கள் மாணவர்

(8-ம்பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணத்தில் ஒருவர் பலி!

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் இரவு ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி பலியானார்.

யாழ்ப்பாணம் கடற்கரை வீதியைச்சேர்ந்த அருளப்பு செல்லையா குறியல் (வயது 38) என்பவரே மரணமானவர் ஆகும்.

(8-ம் பக்கம் பார்க்க)

## "இலங்கைத் தமிழருக்கு சுயாட்சிவழங்க துரித நடவடிக்கைகள் வேண்டும்"
### இந்திய மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கட்சி கோரிக்கை

(சென்னை)
"இலங்கைத் தமிழ் மக்களுக்கு முழுமையான சுயாட்சி உரிமைகள் வழங்குவதற்கு துரிதமான நடவடிக்கைகளை இலங்கை அரசு மேற்கொள்ள வேண்டும்" என்று இந்திய மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநில செயற்குழு இலங்கை அரசைக் கோரும் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளது.

சென்னையில் நடைபெற்ற கட்சியின் கூட்டமொன்றிலேயே இவ்வாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழர்களுக்கு

(8ம் பக்கம் பார்க்க)

## பல்கலைக்கழகமாணவர்களால்கடத்தப்பட்ட
# மூவர் சடலமாக மீட்பு!

(கொழும்பு)
பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்களெனக் கூறப்படுபவர்களால் கடத்திச் செல்லப்பட்ட விவசாயத்துறை அமைச்சக அதிகாரிகள் மூவர், தேயிலைத்தோட்டம் ஒன்றிலிருந்து உருக்குலைந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் பற்றிப் பொலிஸார் தெரிவிக்கையில்; கடந்த திங்கட்கிழமை பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கு முன்பாகச் சென்றுகொண்டிருந்த விவசாயத்துறை அமைச்சக ஜீப் வண்டி, மாணவர் [illegible] றினால் பலவந்தமாகத் தடுக்கப்பட்டது என்றும், இதில் இருந்த நால்வரில், அமைச்சரின் உறவினர் ஒருவர் சாதுரியமாகமாகத் தப்பிவிட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது. சாரதியும் முன்னாள் மத்திய [illegible]

(8-ம் பக்கம் பார்க்க)

## மாத்தறை கண்ணிவெடி: தமிழ் இளைஞர் கைது

(கொழும்பு)
மாத்தறையில் அண்மையில் இடம் பெற்ற கண்ணிவெடி சம்பவம் தொடர்பாக அப்பகுதியில் தமிழ் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் வடபகுதியை சேர்ந்தவரென்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. மேற்படி கண்ணிவெடிச் சம்பவத்தில் நான்கிற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டது தொடர்பாகவே இந்த இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை இப்பகுதியில், தென்பகுதி தீவிரவாதிகளின் மறைவிடங்களைத்தேடி இவ்வார முற்பகுதியில் பெரும் தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு பலர்கைதானதாகவும் கூறப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

இறக்குமதியாக விருக்கும் (Holland, OR, U. K) விதை உருளைக் கிழங்கு தேவைப்படுவோர் எம்மிடம் தொடர்பு கொள்ளவும். பிள்ளையார் மெற்றல் வேக்ஸ், 259, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (சி-2931)

சகலவிதமான மரத்தளபாடங்கள் கட்டிடத்திற்குரிய நிலை யன்னல் கதவு காட்டுத்தடி வகைகள் விற்பனைக்கும், ஓடருக்கும் பெற்றுக் கொள்ளலாம். மகாலக்ஷ்மி ரேட் குறூப், 75, மானிப்பாய் ரோட், (ஈழநாடு அருகாமை), யாழ்ப்பாணம். சி-2934

Hisex, Golden Comet பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், சேவற்குஞ்சுகள், கறுப்பு சேவற்குஞ்சுகள், Hyline வெள்ளை, கறுப்பு, பிறவுண் பேட்டுக் குஞ்சுகள் ஒவ்வொரு வாரமும் முன்கூட்டியே பதிவு செய்து பெற்றுக்கொள்ளலாம். சற்குணராஜா & பிறதர்ஸ், பிரம்படி லேன், கொக்குவில். (சி 2726)

கருவாடு, ஆட்டுத்தோல், மற்றும் மாட்டுத்தோலுக்கு உகந்த அரைத்த உப்புத்தூள் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். M. G. M. & Stores, 777, K. K. S. Rd, Jaffna. சி-2925

உரும்பிராய் வடக்கு கற்பகப் பிள்ளையார் கோவிலுக்குப்பின்னால் 250 யார் தூரத்தில் கிணற்றுடன் 5 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு; 48, ஸ்ரீவெங்கடேசன்வீதி, (பெருமாள் கோவில் தெற்கு) யாழ்ப்பாணம். (சி-2802)

Honda C D 185மோட்டார் சைக்கிள் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு:- இ. துரைவீரசிங்கம். பலாலி ரோட், கோண்டாவில். (கோண்டாவில் சந்தி அருகாமையில்) (சி2936)

Nallur Farm Centre. prima Lohmann வெள்ளை சிவப்பு பேட்டுக் குஞ்சுகள், Broiler குஞ்சுகள், சேவற் குஞ்சுகள், Golden Comet பேட்டுக்குஞ்சுகள் Hyline கறுப்பு, வெள்ளை பேட்டுக்குஞ்சுகள் ஒவ்வொரு செவ்வாய்/புதன் கிழமைகளில் பெற்றுக்கொள்ளலாம். தடுப்புமருந்துஒவ்வொருவெள்ளிக் கிழமைகளில் இலவசமாக பெற்றுக் கொள்ளுங்கள். C/o நல்லூர் வீடியோ சென்டர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (சி-2798)

### நாவல்

மீராவின் பாலைவனப் பயணிகள் (கே. ஆர். டேவிட்) துடிதுடிப்புடன் செல்லும் இந் நாவலைப் படித்துமுடித்துவிட்டுத்தான் கீழே வைக்கமுடியும், மலிவுப் பதிப்பு 10/- ராஜன் புத்தகசாலை, யாழ்ப்பாணம். [சி-2940]

### மணப்பந்தல்

யாழ் உயர் இந்து வேளாளகுல பொறியியலாளர் மணமகனுக்கு பெற்றோர் அழகிய படித்த விரிவுரையாளர், கணக்காளர், அல்லது பொறியியலாளர் மணப்பெண்ணை தேடுகிறார்கள். மணப்பெண்ணின் வயது 38க்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும். சாதகம், சீதனம் மற்றும் விபரங்களுடன் விண்ணப்பிக்கவும் விளம்பர இல:- C. 2399 மே/பா ஈழநாடு யாழ்ப்பாணம். (சி. 2939)

### கல்வி

S. K. ஜீவமோகனின் O/L கணித வகுப்புக்கள் அதிசித்தி பெற தொடர்புகொள்க: ஸ்ரார் பியூப்பில் அக்கடமி, கல்வியங்காடு. [தனிப்பட்ட முறையிலும் கல்வி பெறலாம்] [சி-2794]

### காணவில்லை

ரேவர் பொமறேனியன் ஆண் இரண்டு வயது, சிகப்பு நிறம், வாயில் கறுப்பு, நல்ல சடை, தற்சமயம் அதன் மயிர் கொட்டப்படுகிறது. 8-ம் திகதி முதல் இதைக் காணவில்லை. இதைக் கண்டு பிடித்துத் தருபவர்களுக்கு 500/- ரூபா சன்மானம் கொடுக்கப்படும். பிடித்தால் அல்லது வைத்திருந்தால் கீழ்க்காணும் விலாசத்துக்கு அறிவிக்கவும். 249, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (சி 2941)

### தேவை

பழைய பித்தளை, வெண்கலம், செம்பு கூடிய விலைக்கு வாங்கப்படும். தொடர்புசிவன் மாளிகை லிமிட்டெட், 166, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். (சி 2920)

யாழ். நகரில் பிரபல மின்பொருள் விற்பனை ஸ்தாபனத்திற்கு ஆற்றல் மிக்க விற்பனையாளரும், காசாளரும்தேவை. கல்வித் தகைமைகள் க.பொ.த.(உயர் தரம்) கணிதமும் ஆங்கில அறிவாற்றலும் தேவை. வயதெல்லை20-35இடைப்பட்டவர்கள் சொந்தக் கையெழுத்தில் விண்ணப்பிக்கவும். விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி: விளம்பர இல. எ-273, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். (எ-273)

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

# பதவி உயர்வு

(யாழ்ப்பாணம்)

மன்னார் - விடத்தல்தீவு றோமன் கத்தோலிக்க வித்தியாலய அதிபர் திரு. அந்தோனிமுத்து 'ஆரம்ப கல்வி ஆலோசகராக' மன்னார் கல்வித் திணைக்களத்திற்கு பதவி உயர் பெற்றுச் சென்றுள்ளார்.

இவர் அதிபராக இருந்த மேற்படி பாடசாலைக்கு திரு. எஸ். பெனடிக்ற் அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

# வலி. கிழக்கு திருத்தல யாத்திரை பூர்த்தி விழா

(அச்சுவேலி)

வலிகிழக்கு (கோப்பாய்) உதவி அரசாங்க அதிபர் பிரிவு ஆலயங்களிடையே நடைபெறும் திருத்தல பாதயாத்திரை கடந்த 3ம் திகதி தொடக்கம் நடைபெற்றுவருகின்றது.

'ஆத்மஜோதி' முத்தையா சலைமையில் அடியார் குழு திருத்தல பாதயாத்திரையை மேற்கொண்டுள்ளது.

இம்மாதம் 3ம் திகதி உரும்பாராய் கருணாகரப்பிள்ளையார் கோவிலில் ஆரம்பமாகிய இந்த திருத்தல பாதயாத்திரை கோப்பாய் தொகுதியில் உள்ள சகல ஆலயங்களையும் தரிசித்து இன்று 11-ம் திகதி கோப்பாய் கண்ணகை அம்மன் கோவிலில் முடிவடையும்.

திருத்தலப் பாதயாத்திரை பூர்த்திவிழா இன்று கோப்பாய் வடக்கு பலாலை, கண்ணகை அம்மன் தேவஸ்தானத்தில் கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் திரு. க. குலேந்திரா தலைமையில் நடைபெறும்.

சிவத்தமிழ்ச் செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி தொடக்கவுரை நிகழ்த்துவார்.

ஆத்மஜோதி நா. முத்தையாவுக்கு பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்படும்.


யாழ்ப்பாணத்தில் சகலவிதமான இறக்குமதி செய்யப்பட்ட திருமண பிறந்ததின விழா அழைப்பிதழ்களுக்கும், தேசிய கடதாசிக் கூட்டுத்தாபன உற்பத்திகளுக்கும் பாடசாலை, காரியாலய உபகரணங்கள், மின்சார அலங்காரப்பொருட்களுக்கும் நியாயமான ஸ்தாபனம்:

**அம்பலவாணர் அன் சன்ஸ்,**

196, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

(ஏ 276)



பிரகாசமான சலவைக்கு




பிறைற் சோப்

உறைகளைச் சேகரியுங்கள் பரிசுகளைப் பெறுங்கள்

**பிறைற் சோப்**

இன்டஸ்றீஸ் - மல்லாகம்.


# காரியப்பரின் ஆளுமைக்கு அவரது உரையே சான்று

## பாராளுமன்றத்தில் அஷ்ரப்

(கொழும்பு)

''பத்து ஆண்டுகாலமாக ஜனாப், எம். ஏ. எம். எஸ். காரியப்பர் பாராளுமன்றத்தில் ஆற்றிய உரை அவரின் திறமைக்கும் ஆளுமைக்கும் சான்றாக அமைகின்றன. முஸ்லிம் சமூகத்தின் முக்கிய தேவை தனிமுஸ்லிம் கட்சி என்பதை உணர்ந்து 196ம் ஜூலை மாதத் தேர்தலுக்கு அகில இலங்கை முஸ்லிம் ஐக்கிய முன்னணி என்ற அரசியல் கட்சிக்கு அங்கீகாரம் பெற்றுத்தந்தவர் ஜனாப் காரியப்பர்.''

இவ்வாறு முஸ்லிம் காங்கிரஸ தலைவர் ஜனாப் எம். எச். எம். அஷ்ரப் கேட்முதலியார் ஜனாப் காரியப்பரின் மறைவையொட்டி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அனுதாபப் பிரேரணையின் மீது பேசுகையில் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

''பெரும்பான்மை மக்களின் அபிலாஷைகளுக்கும் சிறுபான்மை சமூகங்களின் உரிமைகளுக்கும் இடையே முரண்பாடுகள் ஏற்படுகின்றபோது சிறுபான்மைச் சமூகங்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக அரசியலமைப்பு விதிகளை நடைமுறைப் படுத்த அரசாங்கம் தவறக்கூடாது. பெரும்பான்மை அரசியல் கட்சிகள் சிறுபான்மைச் சமூகங்களின் உரிமைகளை பாதுகாக்க வேண்டுமாயின் தைரியத்துடன் செயற்பட வேண்டும் என்று முழங்கியவர் கேட்முதலியார்.

''கேட்முதலியார் ஜனாப் காரியப்பர் 65 ஆண்டுகள் தொடர்ச்சியாக அம்பாறை மாவட்ட ஏழை மக்களுக்கும், முழுநாட்டுக்கும் தனது திறமையினால் அளப்பரிய சேவையாற்றியுள்ளார். அம்பாறை மாவட்ட மக்கள் அவரைச் செல்லமாக ''மாப்பெட்டி வள்ளியனார்'' என்றே அழைத்தார்கள். ஏழைவிவசாயிகளுக்காக உதவிய அவர் ஏழை விவசாயிகளின் காணி, நீர்ப்பாசன பிரதேசங்களில் கவனம் செலுத்தினார். கல்முனைத் தொகுதியின் மூலைமுடுக்கெல்லாம் பாடசாலைகளையும் வாசிகசாலைகளையும் கேட் முதலியார் நிறுவினார்.

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு. அமிர்தலிங்கம் பேசுகையில், ஆரம்ப காலத்தில் எம்முடன் சேர்ந்து ஒன்றாக உழைத்த கேட் முதலியார் பின்பு எம்மிடம் இருந்து விலகினார். எதிர்க்கட்சியில் இருந்து மக்களுக்கு நல்ல சேவையை ஆற்ற முடியாது என்ற கருத்திலிருந்தே அவர் இவ்வாறு செயற்பட்டார். கட்சியடிப்படையில் நம்மிருவரிடையே கருத்து வேறுபாடுகள் காணப்பட்ட போதிலும் நாம் இருவரும் நல்ல நண்பராகவே கடைசி வரை இருந்தோம்'' என்றார்.

# யாழ். மாவட்டத்தில் 'மாதிரிக்கண்ட அபிவிருத்தித்திட்டம்' 14 கிராமங்கள் தெரிவு

(அச்சுவேலி)

யாழ். மாவட்டத்தில் முன்னோடி விவசாய அபிவிருத்தி திட்டமாக பதின்நான்கு கிராமங்களில் ''மாதிரிக்கண்ட அபிவிருத்தித் திட்டம்'' நிறைவேற்றப்படவுள்ளது.

விவசாயிகளின் சகல வசதிகளையும் சேவைகளையும்'' நிறைவு செய்து, பரிட்சார்த்தமான ஒரு முழுமையான விவசாயக் கிராமத்தை எவ்வாறு உருவாக்க முடியும் என்பதை செயல் முறையில் அவதானிப்பதற்கு வசதியாக ''மாதிரிக் கண்ட அபிவிருத்தித்திட்டம்'' நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

யாழ் மாவட்டத்தில் உள்ள 14 கமநல சேவை நிலையப் பிராந்தியங்களிலும் வசதிக் குறைவான விவசாயக் கிராமம் ஒவ்வொன்று தெரிவு செய்யப்பட்டு ''மாதிரிக் கண்ட அபிவிருத்தித் திட்டம்'' செயற்படுத்தப்படுகின்றது.

''மாதிரிக்கண்ட அபிவிருத்தித்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு ஓய் ஊதியத் திட்டம், பயிர்ச் செய்கை வசதி, நீர்ப்பாசன ஒழுங்கு, போக்குவரத்து வசதி, நிறைவான உணவுப் பயிர்ச் செய்கைத் திட்டம், விவசாய தொழில் நுட்ப ஆலோசனை உட்பட ஏனைய எல்லா உதவிகளும் வழங்கப்படவுள்ளது என்று கமநல சேவைப்பகுதி அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# க. பொ. த. மாணவர்கள் கவனத்திற்கு

[யாழ்ப்பாணம்]

க. பொ. த. (சாதாரண) வகுப்பில் படிக்கும் மாணவன் தான் படிக்கும் பாடசாலையில் க. பொ. த. [உயர்தர] வகுப்பு இருந்தால் அப்பாடசாலையைவிட்டு வேறு பாடசாலைகளில் அனுமதிக்கப்படமாட்டார்.

கடந்த காலங்களில் அருகிலுள்ளபாடசாலைகளில் உயர்தர வகுப்புப் படிப்பதற்கு வசதிகள் இருந்தும், பலர் நகர்ப்புறப் பாடசாலைகளுக்குச் சென்று தமது உயர்தரக்கல்வியை தொடர்கிறார்கள். இதனால் உயர்தர வகுப்பு நடத்த வேண்டிய பாடசாலைகளில் குறிப்பிட்ட வகுப்புகள் நடத்த முடியாதநிலைமை ஏற்பட்டுள்ளது.

குறிப்பிட்ட பாடசாலைகளின் அபிவிருத்தி, மாணவர்களின் கல்வி வளர்ச்சி என்பவற்றைக் கருத்தில் கொண்டு புதிய நடவடிக்கை அமுல்செய்யப்படவுள்ளது.

# வலி.கிழக்கு ப. நோ. கூ. ச. தேர்தல் ஒத்திவைப்பு

(அச்சுவேலி)

வலி.கிழக்கு வடபகுதி (அச்சுவேலி) பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைக் குழுக்களின் நிர்வாக உறுப்பினர் தெரிவுக்காக நடைபெறவிருந்த தேர்தல் நியமனப் பத்திரம் தாக்கல்செய்வதும், தேர்தல் நடத்துவதும் காலவரையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

தற்போதைய சூழ்நிலையில் தேர்தலை நடத்தமுடியாதநிலை இருப்பதாக தேர்தல் அதிகாரி திரு. கே. சிவகுருநாதன் தெரிவித்துள்ளார்.

# பயிற்சி வகுப்பு

(யாழ்ப்பாணம்)

பண்டத்தரிப்பு கோட்டக் கல்விப் பகுதிக்கு உட்பட்ட கொத்தணி அதிபர்களுக்கான சேவைக்காலப் பயிற்சி வகுப்பு இம்மாதம் 16ம் திகதி நடைபெறவுள்ளது.

இவ்வகுப்பு பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## அமெரிக்காவில் மீண்டும் சீன மாணவர் ஆர்ப்பாட்டம்:

# ஐ.நா. பாதுகாப்புச்சபையை உடன் கூட்ட கோரிக்கை

### ஜனதிபதி புஷ்ஷிடம் நியூயோர்க் மேயர் கேட்கிருர்

(நியூயோர்க்)

சீன மாணவர் ஜனநாயகப் போராட்டத்தினுல் சீனுவில் எழுந்துள்ள நெருக்கடி நிலை குறித்து ஐக்கியநாடுகள் பாதுகாப்புச்சபை உடனடியாகக் கூடி ஆராயவேண்டும்''

இவ்வாறு நியூயோர்க் நகர மேயர் திரு. எட்ஸ்கொச் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஐக்கியநாடுகள் சபையைக் கூட்ட அமெரிக்க ஜனதிபதி திரு. ஜோர் புஷ் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் திரு. ஸ்கொச் கேட்டுள்ளார்.

இதேவேளையில் நியூயோர்க்கிலுள்ள ஐக்கியநாடுகள்சபை தலைமை அலுவலகத்திற்கு முன்னிலையில் அமெரிக்காவில் உள்ள சீன மாணவர்கள் நேற்று முன்தினமும் பெரும் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர்,

ஜனநாயக ஆர்ப்பாட்டத்திற்கு எதிராக சீன இராணுவம் மேற்கொண்டுவரும் ஜனநாயக விரோத நடவடிக்கைகளை உடனடியாகக் கைவிடவேண்டும் என்று கோரியே இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றதாக அறிவிக்கப்பட்டது.

## ஏ. எம். ராஜாவின் குடும்பத்திற்கு ரூ. 50,000

(சென்னை)

அண்மையில் மறைந்த தென்னிந்திய திரைப்பட பின்னணிப் பாடகர் ஏ. எம். ராஜாவின் குடும்பத்திற்கு தமிழக முதல்வர் நிதியிலிருந்து 50 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளதாக தமிழக முதல்வர் திரு. மு. கருணுநிதி தெரிவித்துள்ளார்.

## பங்களாதேஷில் ஆற்றில் பஸ் பாய்ந்து 40 பேர் பலி!

(டாக்கா)

பங்களாதேஷில் பிரயாணிகள் பஸ் ஒன்று ஆற்றில் பாய்ந்ததை அடுத்து 40 பிரயாணிகள் உயிரிழந்தனர் என அறிவிக்கப்படுகிறது.

தலைநகர் டாக்காவுக்குத் தெற்கே 250 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள ஆறு ஒன்றில் வீதியை விட்டு விலகிய பிரயாணிகள் நிறைந்த பஸ் ஒன்று பாய்ந்த போதே இந்த அனர்த்தம் ஏற்பட்டது.

## சீன பல்கலைக்கழகமாணவர் ஆயிரக் கணக்கில் தலைமறைவு!

(பீக்கிங்)

சீனுவில் மாணவர் ஆர்ப்பாட்டங்களைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள இராணுவமும், பொலிசாரும் பல்கலைக்கழக வளாகங்களுக்குள் புகுந்ததை அடுத்து மாணவர்கள் ஆயிரக்கணக்கில் மறைந்துவிட்டனர் என்றும், மற்றும் பலர் தத்தமது வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மாணவர் ஆர்ப்பாட்டம் தற்போது ஷங்காய் போன்ற முக்கிய நகரங்களில் இடம் பெறுவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளையில் சீன இராணுவமும், பொலிசாரும் தொடர்ந்தும் பீக்கிங் வீதிகளில் இரவுபகலாக ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர் என்றும், சுவரொட்டிகளை ஒட்டும் மாணவர்களுக்கு எதிராகக் கடும்நடவடிக்கை எடுக்கப்படும் என்று இராணுவமும், பொலிசாரும் கடும் எச்சரிக்கை விடுத்துள்ளனர் என்றும் அறிவிக்கப்பட்டது.

## திருநாவுக்கரசை ஜெயலலிதா வெளியேற்றுகிருர்

[சென்னை]

அண்ணு திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து திரு. திருநாவுக்கரசை வெளியேற்றுவதற்கு கட்சித் தலைவி செல்வி ஜெயலலிதா நடவடிக்கை எடுத்துள்ளார்.

திரு. திருநாவுக்கரசு, ஜெயலலிதாவின் அந்தரங்கச் செயலாளர் திரு. நடராஜனை கட்சியிலிருந்து வெளியேற்ற சென்னை நகரெங்கும் 'போஸ்டர்' ஒட்டியதாகத் தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டையடுத்தே இந்நடவடிக்கைஎடுக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

## எல்-சல்வடோர் சிரேஷ்ட அமைச்சர் சுட்டுக்கொலை!

(சன்-சல்வடோர்)

எல்—சல்வடோர் சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் புரட்சியாளர்களால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார் என அறிவிக்கப்படுகிறது.

கடந்த வாரமே பதவி ஏற்றுக்கொண்ட புதிய அமைச்சரவையில் அங்கம் வகுக்கும் திரு. சோஸே அன்ரோனியோ ரெட்றக்கோடஸ் அவரது இல்லத்திற்கு முன்வைத்து சுடப்பட்டதை அடுத்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட பின்னர் மரணமானுர்.

அமைச்சரின் கார்ச் சாரதியும் மெய்க்காப்பாளரும் இச்சம்பவத்தில் கொல்லப்பட்டனர்.

இடதுசாரி தேசிய விடுதலை முன்னணி கிளர்ச்சியாளர்களே இக்கொலைக்குக்காரணம் என்று கூறப்பட்டது.

## கழுதை இலவசம்!

(ஹராரே)

ஸிம்பாப்வேயில் வலது குறைந்தவர்கள் நெடுந்தூரம் பயணம் செய்வதற்கு அந்நாட்டு செஞ்சிலுவைச் சங்கம் கழுதைகளை வழங்கி வருவதாக அறிவித்துள்ளது.

ஊனமுற்ரேர், மூன்று சில்லு சக்கர நாற்காலிகளைப் பயன்படுத்திவந்தாலும் அவற்றைப் பயன்படுத்தி நெடுந்தூரம் பயணம் செய்யமுடியாமல் இருப்பதைக் கருத்திற்கொண்டு அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு கழுதை இலவசமாக வழங்க ஸிம்பாப்வே செஞ்சிலுவைச் சங்கம் முடிவு செய்திருப்பதாக இச்சங்கத் தலைவர் திரு. விக்டர் சிடாங்கோ தெரிவித்தார்.

## "பாக். அமெ. கேட்டாலும் ஆப்கான் அரசு ராஜிநுமாச் செய்யாது"

(காபூல்)

''ஆப்கானிஸ்தானின் இன்றைய அரசாங்கம் மக்களால் சட்டபூர்வமாகத் தெரிவு செய்யப்பட்டது. எக்காரணம் கொண்டும் அது பதவி விலகாது.''

இவ்வாறு ஆப்கானிஸ்தான் அதிபர் ஜனுப் நஜிபுல்லா தெரிவித்துள்ளார்.

அதிபர் நஜிபுல்லாவின் ஆப்கனிஸ்தான் அரசு பதவியிலிருந்து வெளியேறினுல் மட்டுமே ஆப்கானிஸ்தான் நெருக்கடிக்குத் தீர்வுகாணமுடியும் என்று அமெரிக்க அதிபர் திரு. ஜோர்ஜ் புஷ்ஷும் பாகிஸ்தான் பிரதமர் திருமதி பெனுஷிர் பூட்டோவும் தெரிவித்திருந்த கூற்றுக்குப் பதிலளிக்கும் வகையிலேயே ஜனுப் நஜிபுல்லா மேற்கண்டவாறு கூறினுர்.

ஆப்கானிஸ்தானின் இன்றைய அரசுக்கு சோவியத் யூனியனின் ஆதரவு இருக்கின்றபோதிலும் ஐக்கிய நாடுகள் சபையும் இந்த அரசை அங்கீகரித்துள்ளது. எனவே நாம் பதவி விலக[illegible] என்றும் ஜனுப் நஜிபுல்லா நிருபர்களிடம் தெரிவித்தார்.

## வந்து குவியும் விண்ணப்பங்கள்

[யாழ்ப்பாணம்]

வடபிராந்தியச் சுகாதாரச் சேவைத் திணைக்களத்தில் லிகிதர் தரத்தில் பன்னிரண்டு வெற்றிடங்கள் நிரப்புவதற்கு இதுவரை ஆயிரத்திற்கும் அதிகமான விண்ணப்பங்கள் வந்து குவிந்துள்ளன.

கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களிலுள்ள [illegible] அலுவலகங்களிலேயே இவ்வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளன.

## யாழ். பஸ்நிலையச் சூழலில் பொது மலசலகூடம் அமைக்கக் கோரிக்கை

[யாழ்ப்பாணம்]

''யாழ். பஸ்நிலைய சுற்றுடலில் பொது மலசலகூடம் ஒன்று அமைத்து யாழ். போதனு வைத்தியசாலையில் அமைந்துள்ள மலசலகூட இட நெருக்கடியைத் தவிர்க்க உதவவும்''.

இவ்வாறு யாழ். போதனு வைத்தியசாலை நிர்வாகசபை யாழ். மாநகர சபை ஆணையாளருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

போதனு வைத்தியசாலை நிர்வாகசபைக் கூட்டத்தில் இது தொடர்பான தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது. இக்கூட்டத்தில் கலந்துகொண்ட யாழ்.மாநகர ஆணையாளர் திரு. பொ. பாலசிங்கத்திடம் இக்கோரிக்கைநேரில் விடுக்கப்பட்டது.

தற்போது யாழ். போதனு வைத்தியசாலையிலுள்ள மலசல கூடத்தையே யாழ். நகருக்கு வரும் பொதுமக்களும் பாவித்துவருவதால் நோயாளிகளுக்குப் பெரும் கஷ்டம் ஏற்படுவதாகவும், பஸ்நிலையச் சூழலில் ஒரு மலசலகூடம் அமைக்கப்படும் பட்சத்தில் நோயாளரின் இக்கஷ்டநிலை போக்கப்படும் என்றும் ஆணையாளரிடம் சுட்டிக் காட்டப்பட்டது. [(கு]

# 'மொழியும்மதமும் நமது உயிர்'

(மாவிட்டபுரம்)

''நமது பிள்ளைகளின் இளம் பராயத்தை நல்ல வழியில் நெறிப்படுத்த பாடசாலைகள் பணிபுரிகின்றன. அது போலவே ஆலயங்களும் எமது பிள்ளைகளை சமயம் காட்டும் நல்வழியில் செல்ல வழிகாட்டுகின்றன. இருகண்கள் போல் விளங்கும் பாடசாலையும் ஆலயமும் சிறப்புற சேவை யாற்றினுல் தூய்மையான சமுதாயம் உருவாக வழிபிறக்கும்''.

இவ்வாறு தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தியாசாலை நிறுவியவர் நினைவு தினவிழா, பரிசளிப்பு விழா ஆகியவற்றில் பிரதம அதிதியாகக் கலந்து பரிசளிப்புப் பேருரை ஆற்றிய சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி கூறினுர்.

பண்டத்தரிப்பு கோட்டக் கல்வி அதிகாரி திரு. க. மகேசன் பாடசாலைக் கொடியை ஏற்றி விழாவை ஆரம்பித்து வைத்தார். அதிபர் திரு. ச. வேலாயுதபிள்ளை தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி மேலும் கூறியதாவது:

''மாணவர்களின் நெற்றியில் விபூதியும், வாயில் தேவாரமும், வாழ்வில் சைவநெறியும், பண்பாடும் விளங்க வேண்டும் என்ற குறிக்கோளுடன் ஆரம்பிக்கப்பட்ட இப் பாடசாலை, அக் குறிக்கோளை அடைவதற்காக ஆற்றிவரும் பணிகள் பாராட்டுதற்குரியது.

''எப்படியும் வாழ்ந்துவிடலாம் என்று நாம் நினைத்து விடக்கூடாது. மொழியையும் மதத்தையும் நம் உயிராக மதித்து நல்வழியில் நற்பிரஜைகளாக வாழமுயல வேண்டும். கல்வி கற்பதுடன் மட்டும் நின்றுவிடாது சமய ஒழுங்கு, கட்டுப்பாடு என்பனவற்றை பேணி நடக்கப் பழகவேண்டும். உலகெங்கும் எமது சமயத்தின் பெருமைகளை வியந்து போற்றுகிருர்கள். ஆனுல் நாம் அவற்றை அறியாமலும், பின்பற்ருமலும் வேறு வழிகளில் நாட்டம் கொள்கிருேம். இந்நிலை மாறவேண்டும்'' என்ருர்.

நிறுவியர் நினைவுப்பேருரை

(7-ம் பக்கம் பார்க்க)

## இராசி பலன்

**11-06-1989**

அட்டமி பின்னிரவு 1-40 வரை; பூரம் பகல் 12-34 வரை. சித்த அமிர்தயோகம், இராகு காலம் 4-23 — 5-57 வரை. சுபகருமங்களுக்குஏற்றதல்ல.

மேடம்:- எண்ணங்களில் மலர்ச்சி, தொழிலில் ஆதாயம், மனதுக்கினிய சம்பவங்கள், சகோதரர் உதவி.

இடபம்:- மனக்கிலேசம், குடும்பப்பிரிவு, தாய்மூலமான கவலை, தொழில் பிரச்னை, கவலை.

மிதுனம்:- வாழ்க்கைத் துணைவரால் துன்பம், சிந்தனை பாதிக்கும். தொழில் மூலமான கவலை, அந்நியவாசம்.

கடகம்:- மனதில் துணிவு, காரிய அனுகூலம், புதிய முயற்சி, பணவரவு, குடும்ப சுகம், விருந்து.

சிங்கம்:- தீயசிந்தனைகள் உதயமாகும், கடன்சுமை, கண்ணியக்குறை, குடும்பக் கலகம்.

கன்னி:- வாழ்க்கைத் துணைவரால் அனுகூலம், காதல் உறவு, கண்ணியமான சந்திப்பு, தொழில் வெற்றி.

துலாம்:- வெற்றிப்படிகள் சறுக்கும், குடும்பக்கவலை, அன்னியர் சகாயம், ஆழ்ந்த யோசனை, பிணி.

விருச்சிகம்:- புதியமுதலீடு, குடும்ப மகிழ்ச்சி, பிரிந்தவர் கூடுவர், காதல் வெற்றி, களிப்பு.

தனுசு:- இடமாற்றம், புதிய சிந்தனை, குடும்ப பாசம், எதிரிகளால் சகாயம், குரு ஆசி, தொழில் லாபம்.

மகரம்:- கடன்படல், மன அமைதி குன்றல், உறவினர் தொல்லை, பொதுப்பணியில் சிக்கல், தொழில்குறைவு.

கும்பம்:- காரியம் கைகூடாமை, பயணங்களால் சிக்கல், பகைவர்கள் தொல்லை கடும் போக்கு.

மீனம்:- கடித உறவு, விவாக சோபனம், குடும்ப சிறப்பு, பணவரவு, மக்களால் புகழ், வெற்றி.

## பல்கலைக்கழக அனுமதி: திகதி ஒத்திவைப்பு

(கொழும்பு)

கொழும்பு பல்கலைக்கழக கலை, சட்ட பீடங்களுக்கு புதிய மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளும் திகதி ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக நிர்வாகம் தெரிவித்துள்ளது.

நாளை திங்கட்கிழமை இப்பீடங்களுக்கு புதிய மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளும் இறுதி நாள் என அறிவிக்கப்பட்டபோதிலும் இம்மாதம் 19 ம் திகதிக்கு அது ஒத்திவைக்கப்பட்டுள்ளது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

மனிதன் அடையக்கூடிய உயர்ந்த பொருள் அறிவு என்பர்; ஆனுல் அதுமட்டுமல்ல, அறிவினுள் கலந்த அனுபவமே உயர்ந்தது.

— தோரோ

## நமது நோக்கு

# மினி பஸ் சேவை முன்னேறுமா?

**1977**-ல் யூ.என்.பி. ஆட்சிக்கு வந்ததும், திறந்த பொருளாதாரக் கொள்கைக்கு ஊக்கமளிக்கப்பட்டது. தனியுரிமை பெற்றிருந்த இ. போ. ச. சேவையிற் பலகுறைபாடுகள்இருந்தன. எனவே குறைபாடுகளைக் களையவும், மக்களுக்கு நல்ல சேவையைக் கொடுக்கவும், தனியார் பஸ் சேவைக்கு அனுமதி வழங்கப்பட்டது.

அந்தவேளையில் அறிமுகமானதுதான் மினிபஸ் சேவை. போட்டிப் பொருளாதாரம் என்ருலே, போட்ட முதலுக்குக் குறுகிய காலத்திற் கூடிய இலாபம்அடையவேண்டும்என்ற எண்ணமே மேலோங்கி நிற்கும்.

மறுசீரமைக்கப்பட்ட மினிபஸ்களே ஜப்பானிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன. இருந்து பயணம் செய்பவர்களுக்கென்றே இந்த பஸ்கள் உருவமைக்கட்டன. ஜப்பானியர்கள் கட்டையர்கள், எனவே நின்று போவதற்கும் இவை அமைக்கப்பட்டன என்ற தவருன எண்ணம் எம்மவருக்குவந்துவிட்டது. இருந்து போகிற பயணிகளைவிட நின்று போகும் பயணிகள் தொகை அதிகரித்துவிட்டது.

தமிழன் தலைநிமிர்ந்து வாழமுடியாத நிலையைத் தத்ரூபமாக வெளிநாட்டவருக்கும் காட்டத்தான் போலும் இங்கு மினிபஸ்களில் தலைகுனிய வைக்கிருர்களோ? இல்லவேயில்லை; அங்கும் இந்த நிலைதான். சுதந்திரம் பெற்று நாற்பது ஆண்டுகளாகியும், தமிழருக்கு உரிமை கொடுக்கவில்லையே எனப் பிறர் இடித்துக்காட்டத் தென்பகுதியினரையும் குனியவைக்கிறது மினிபஸ்.


குறைகளை மாத்திரம் பெரிதுபடுத்தி, இக்கட்டான நிலையிலும் சேவையாற்றிவரும் மினிபஸ் உரிமையாளர்களின் உற்சாகத்தைக் குறைப்பது எமது நோக்கமல்ல. மினிபஸ் சேவையிலும் 'டிக்கட்' வழங்கப்பட நடவடிக்கை எடுக்கப்படும் எனச் செய்தி வந்துள்ளது. அடிக்கடி கட்டண மாற்றத்தால் அவதியுறும் பிரயாணிகளுக்கு இது நிம்மதி அளிக்கும் செய்தி.

குறிப்பிட்ட எல்லைகட்கு மினிபஸ் கட்டணம் நிதானமாக இருக்கும். ஆனுல் இடையிலே ஏறி இடையிலே இறங்கும் பிரயாணிகளிடமிருந்து கூடுதல் கட்டணம் வாங்கப்படுவதாகப் புகார்கள் உண்டு. டிக்கட் வழங்கும் முறை நடைமுறைக்கு வந்தால் இந்தக் குறை நீங்கிவிடும் என்பது எமது நம்பிக்கை.

நேரசூசியிலும் கவனம் செலுத்த இருக்கிருர்கள். இ. போ. ச. நேரசூசிகைக்கு அமைவாக மினிபஸ் நேரசூசிகை அமைய வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனுல் ஒன்றையொன்று துரத்துவதும், சிலவேளைகளில் 'உருட்டிச்செல்வதும்' தவிர்க்கப்படும்.

மினிபஸ் சங்கத்தினர் பொதுமக்களின் புகார்களுக்கு மதிப்புக்கொடுத்து, கைகொடுத்துதவிய மினிபஸ் சேவையின் குறைபாடுகளைக் களைந்து ஆவன செய்யவேண்டும். எல்லாப் பாதைகளிலும் மினிபஸ்களைக் கண்காணிக்க, பொதுமக்களின் பயணக் குறைபாடுகளைக் கேட்டறிய சில அலுவலர்களை நியமித்து, அறிக்கைகள் பெற்று, அதன் அடிப்படையில் சீர்திருத்தங்களைச் செய்வதுபலனுள்ள நடவடிக்கையாக இருக்கும்.





இங்கே காணப்படும் வட்டவடிவமான இருபடங்களையும் பார்க்கும் பொழுது உங்களுக்கு அதிசயமாக இருக்கிறதா?

யாழ்ப்பாணத்தை ஆண்ட சங்கிலிய மன்னன் காலத்தில் புளக்கத்திலிருந்த நாணயங்களின் வடிவத்தையே நீங்கள் இங்கு பார்க்கிறீர்கள்.

வடமராட்சிப்பகுதி இமையாணனில் உள்ள விளையாட்டரங்கத்தை புனரமைப்புச் செய்யும் பணியில் அவ்வூர் மரகள் ஈடுபட்டிருந்தனர். அப்பொழுது பாரிய பனை மரமொன்றின் அடிப்பாகத்தை அகழ்ந்தெடுக்க வேண்டியேற்பட்டது. கைகளில் கிடைத்தது கலசமொன்று. அதற்குள்ளிருந்தது பழங்கால நாணயங்கள்.

சங்கிலிய மன்னன் தமது பிரதம படைத்தளபதியான இமையாணன் என்பவருக்கு அன்பளிப்பாக இந்நாணயங்களை வழங்கியதாக பண்டிதமணி கணபதிப்பிள்ளையின் ஆய்வு நூல் எடுத்துரைக்கிறது.

# தெல்லிப்பளை அரச ஆஸ்பத்திரியில் பிரான்ஸ் வைத்திய நிபுணர் நோயாளருக்கு சிகிச்சை

[பலாலி]

பிரான்ஸ் வைத்திய நிபுணர்கள் தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலைக்கு வரும் நோயாளருக்குச் சிகிச்சை அளித்துவருகின்றனர். இந்த வைத்தியநிபுணர்கள் அண்மையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் நிலையாக இருந்து சிகிச்சை அளித்துவந்தது தெரிந்ததே.

வாரததில் செவ்வாய்க்கிழமைதோறும் தெல்லிப்பழை வைத்தியசாலையில் மேற்படி வைத்திய நிபுணர் குழு காலை 8 மணி தொடக்கம் 10 மணி வரையும் கிளினிக் நோயாளர்களைப் பார்வையிட்ட பின் சத்திரசிகிச்சைகளும் மேற்கொண்டு வருகின்றனர்.

# வட-கிழக்கில் வசதிகுறைந்த இளைஞர்கள் சிறுதொழில்களை ஆரம்பிக்க புனரமைப்பு அமைச்சு திட்டம்

## அரசு சார்பற்ற நிறுவனங்கள் ஊடாக கடன் உதவி

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணத்திலுள்ள குறைந்த வருமானத்தைப் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த இளைஞர், யுவதிகளுக்கு சிறுகைத்தொழில்களை ஆரம்பிப்பதற்குக் கடன் வழங்கும் திட்டமொன்றைப் புனர்வாழ்வு, புனரமைச்சு நடைமுறைப்படுத்தவுள்ளது.

மேற்படி திட்டத்துக்கெனச் சர்வதேச அபிவிருத்தி நிறுனத்திஞல் வழங்கப்பட்டுள்ள நிதியை அரசு சார்பற்ற நிறுவனங்களுக்கு ஊடாக வேலையற்ற, குறைந்த வருமானமுள்ள குடும்பங்களைச் சேர்ந்த இளைஞர், யுவதிகளுக்குக் கடனுக வழங்க அமைச்சு நடவடிக்கை எடுத்துவருகிறது.

இத்திட்டத்தில் பங்கு கொள்ள விரும்பும் அரசு சார்பற்ற நிறுவனங்களை அமைச்சுடன் தொடர்புகொள்ளுமாறு புனர்வாழ்வு, புனரமைப்பு இராஜாங்க அமைச்சின் செயலாளர் கேட்டுள்ளார்.

## குடிநீர்ப் பிரச்னை தீர்ந்தது

[நாவற்குழி]

நாவற்குழி மகா வித்தியாலயத்தில் நீண்டகாலமாக நிலவிவந்த குடிநீர்ப் பிரச்னை தீர்ந்துள்ளது.

நோர்வேயில் வசிக்கும் நாவற்குழியைச் சேர்ந்த திரு. வீரசிங்கம், சிறீபாஸ்கரன் ஆகியோரும் அவர்களது நண்பர்களும் அக்கறைகொண்டு அனுப்பிய பணத்திஞல் பாடசாலையில் குழாய்க்கிணறு அமைக்கப்பட்டு குடிநீர் பெறப்பட்டுள்ளது.

## சிங்கள ஆசிரியர் நியமிக்க பிரேரணை

(கொழும்பு)

தமிழ்ப்பாடசாலைகளில் சிங்கள ஆசிரியர்களை நியமிக்க வேண்டும் என ஐக்கிய தேசியக்கட்சி எம்.பி. யான ஜனுப் அப்துல் மஜீத் பாராளுமன்றத்தில் பிரேரணை ஒன்றைச் சமர்ப்பித்துள்ளார்.

## புதிய மாணவர் வகுப்பு ஆரம்பம்

(வட்டுக்கோட்டை)

ஆசிரிய பயிற்சிக் கலாசாலையின் புதிய மாணவர்களுக்கான (90—91-ம் ஆண்டு) ஆரம்ப வகுப்புகள் ஜூலை மாதம் தொடங்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

## வெள்ளம், மண்சரிவு நிவாரணம் 12 கோடி ரூபா தேவை

(கொழும்பு)

வெள்ளம், மண்சரிவு நிவாரணப் பணிகளுக்கு சுமார் 12 கோடி ரூபா தேவை என அரசு மதிப்பீடுசெய்துள்ளது.

வெள்ள நிலைமை தொடர்பாக அரசு வெளியிட்டுள்ள அறிக்கையின்படி இரத்தினபுரி, கேகாலை, களுத்துறை, நுவரெலியா, காலி, கம்பஹா, கொழும்பு, மாத்தறை, குருநாகல், கண்டி ஆகிய மாவட்டங்கள் வெள்ளத்திஞல்பாதிக்கப்பட்டுள்ளன. இப்பகுதிகளில் 3 லட்சம்பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 300க்கும் அதிகமானேர் இறந்துள்ளனர். பாதிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை 15 ஆயிரம். (து)

## திருமதி அமரசிறியின் கொலை: 14 சந்தேகநபர்கள் கைது

(கொழும்பு)

தென் மாகாண முதலமைச்சர் திரு. எம். எஸ். அமரசிறியின் மனைவியின் கொலை தொடர்பாகப் பதினன்கு பேர் சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றனர்.

மீகாதென்ன பொலிஸ்பகுதியைச் சேர்ந்த துண்டொலவத்த என்ற இடத்தைச் சேர்ந்தவர்கள் இந்தப் பதினன்கு பேரும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பந்தப்பட்ட பகுதியில் வைத்தே திருமதி அமரசிறி கடந்த புதன்கிழமை இனந்தெரியாத துப்பாக்கி நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டதாகப் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

### மூட்டும் ஞானச் சுடரொளி யாவாள்

சத்தி பேதங்கள் பற்பல வாகிச்
சார்ந்து சேர்ந்து சாதனை செய்து
நித்தி யம்அவை நிலைத்து நின்றிட
நீண்ட தோர்பெரும் அற்புதம் செய்வாள்
முத்தி முகிழ்த்தெழ சித்தம் தெளிவுற
மூட்டும் ஞானச் சுடரொளி யாவாள்
புத்தி படைத்தவள் பூமி புரந்தவள்
பூரணி நாக பூஷணி அம்மாள்

— நாக. சண்முகநாதபிள்ளை.

(இன்று நயினை நாகபூஷணி அம்பாள் 7-ம் திருவிழா)

## பலதும் பத்தும்

**டேவிஸ் கப்!**

ஜூன், ஜூலை மாதங்கள் என்ருல் டென்னிஸ் ஆட்ட வீரருக்கு ஒரு உற்சாகம்! காரணம் என்ன? விம்பிள்டென் மைதானத்தில் டென்னிஸ் போட்டிகள் மும்முரமாக நடைபெறும்.

இங்கு 16 மைதானங்கள் உள்ளன. இதிலே மத்திய மைதானம் புகழ்பெற்றது. அகில இங்கிலாந்து லோன் டென்னிஸ் கிளப் தான் இந்தப் போட்டிகளை நடாத்தும்.

வெறும் விளையாட்டு மாத்திரமல்ல, விம்பிள்டென் நகரமே விழாக்கோலம் பூண்ட மாதிரிக் கலகலப்பு ஏற்படும். ஹோட்டல்கள் நிரம்பி வழியும்; விருந்துக்கள் நடைபெறும்; அலங்கார அணிவகுப்போ என்று ஐயுறும் வண்ணம், வண்ண வண்ணச் சேலைகட்டி, மன்னிக்கவும், சட்டையிட்டு இவ்விருந்துகளிலே பெண்கள்!

நாடுகளுக்கிடையேயான டென்னிஸ் போட்டியில் இறுதி வெற்றி பெறுபவர்களுக்குக் கிடைப்பதே டேவிஸ் கப்! சிறந்த அமெரிக்க டென்னிஸ் ஆட்ட வீரர்தான் டுவிட் டேவிஸ். இவர் 1899 முதல் 1901 வரை உலகச் சாம்பியனுக இருந்திருக்கிருர். அவர் நினைவாக வழங்கப்படுவது தான் டேவிஸ் கப்.

இவர் பார்த்த தொழில் என்ன தெரியுமா? அமெரிக்க ஜனதிபதி கூல் றிஜ் அமைச்சரவையில் யுத்த இலாகா காரியதரிசி!

-- வாணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஞாயிறு

ஞாயிறு வந்ததும்
நற்கதிர் என்கிறோம்
சூரியன் என்கின்றோம்
துதிக்கவும் மறக்கிலோம்
காவலன் என்கின்றோம்
காத்திடப் பொருள்தர
ஆய்வலர் சொல்வராம்
ஆதவன் முதல்வனும்.

ஞாயிறு நாள் இன்றும்
நற்றமிழ் சொல்லிடும்
மாலவன் துணைகேட்டு
வணங்கிடும் நாள்இன்று
வேதவர் வேண்டிடும்
வெண்ணீற்றுநாள் இன்று
ஏதுநாம் கொள்ளினும்
சேவைநாள் ஞாயிறு.

சூரியன் இல்லையேல்
சுழலுலகில் சுகமேது
மாரியும் கோடையும்
வருமவன் அசைவாலே
வேரிடும் மரம் கனியும்
வழிநிழலும் அவன்தரவே
கோரிடும் பொருள்யாவும்
கொட்டுவதும் செஞ்ஞாயிறே!

—மு. சு. கதிர்காமத்தம்பி

# பயணங்கள் முடிவதில்லை!

அமெரிக்க ஜனாதிபதி திரு. ஜோர்ஜ்புஷ் தனது முதலாவது ஐரோப்பியப் பயணத்தை வெற்றிகரமாக முடித்துக் கொண்டு நாடு திரும்பியுள்ளார். நான்கு நாடுகளுக்குச் சென்றிருந்தாலும் நேட்டோ உச்சி மகாநாட்டில் பங்குபற்றுவதுதான் முக்கிய நோக்கம்.

நேட்டோ நாடுகளுக்கிடையே பிளவுகள் என்ற முணுமுணுப்புக் கேட்டுக் கொண்டிருந்தவேளையில் தான் போயிருக்கிறார். ஆனால் எப்படியோ சமாளித்துவிட்டார்.

கிட்டிய தூர அணுவாயுதப் படைக்குறைப்பு, சோவியத்தின் செல்வாக்கைக் குறைக்கப் புதிய உத்திகள் ஆகியன பற்றிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

''அமெரிக்க மக்களுக்கு நம்பிக்கைச் செய்தியைக்கொண்டு வந்திருக்கிறேன்; நேட்டோ மகாநாடு பூரணவெற்றி!'' என்று பெருமதத்தோடு கூறியிருக்கிறார், ஓய்வுக்காக டென்னிஸ் விளையாடப் போய்விட்டார்.

இவர் இப்படி அமெரிக்கமக்களை உற்சாகப்படுத்த வேண்டியதன் மர்மம் என்ன? முப்பது வருடங்களுக்குப்பின் சோவியத்-சீன உறவு மீண்டும்மலர்ந்தது. அமெரிக்க ராஜதந்திரத்துக்குப் பலத்த அடி–அதிர்ச்சி!

### உலக வலம்

கோபர்ச்சேவின் சீனப்பயணம் வரலாற்றிலே திருப்புமுனை. மாணக்கர் கிளர்ச்சியைக் கொடூரமான முறையில் அடக்கினாலும், அதனால் ஏற்படும் பின்விளைவுகள் எப்படி அமைந்தாலும் சீன–சோவியத் நட்புறவுக்குப் பங்கம் ஏற்படாது என்பதே அரசியல் நோக்குநர்களின் கணிப்பு.

சீனாவில் கம்யூனிச ஆட்சிஏற்பட உதவியது சோவியத். ஆனால் குருசேவ் – மாவோ கருத்து வேறுபாட்டால், கொள்கைப்பிளவால் நெருக்கடி தோன்றி நட்பு மறைந்தது. காற்றுள்ளபோதே தூற்றிக்கொண்டது. அமெரிக்கா; சீனாவுடன் நட்புறவை வளர்த்தது.

முதலில் 'பிங்பொங்' விளையாடவென அமெரிக்கா தனது அணியொன்றை அனுப்பி நோட்டம்விட்டது.

அதனைத் தொடர்ந்து அன்றைய ஜனாதிபதி நிக்சன் சீனாவிற்குப் பயணமானார். இது நடந்தது 1972 ல். அன்று தொடக்கம் அமெரிக்க – சீன நல்லுறவு வளர்ந்தது; உலக அரசியல் அரங்குகளிற் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டன.

சீனா என்ற துரும்பு அமெரிக்காவின் கையிற்கு வந்ததும் அரசியற் சீட்டாட்டத்தில் அதன் கை ஓங்கியது. சோவியத்தைப் பணிய வைக்க அதை அடிக்கடி பயன்படுத்தியது.

காலம் கனியட்டும் என்று காத்திருந்தது சோவியத். வடகொரியா, மொங்கோலியா, வியட்நாம் ஆகிய நாடுகளைத் தன்பக்கம் இழுத்துக்கொண்டு வியூகம் அமைத்தது; சீனாவிற்கும கண் சிமிட்டியது.

சீன - சோவியத் அரசியற் காதலை முறித்து விடலாம் என்ற நப்பாசையில் தான் ஜோர்ஜ் புஷ் சீனாவிற்குச் சென்றார். ஜப்பானுக்குச் சென்று திரும்பும்போது சீனாவிற்கும் சென்றுள்ளார்.

கோர்பச்சேவின் சீன விஜயத்திற்கு முந்திவிடவேண்டும் என்று துடியாகத் துடித்திருக்கிறார். பாரதப் போரில் கண்ணனின் உதவியைப் பெற முதலிலேயே சென்று தலைப் பக்கஆசனத்தில் அமர்ந்து விட்டான் துரியோதனன். பிந்தி வந்த அருச்சுனன் காலடியிற் காத்து நின்றான்.

கண்ணன் துயிலெழுந்ததும் காலடியிலிருந்த அருச்சுனனைப் பார்த்துவிட்டு வந்த காரியம் என்னவென்று கேட்டிருக்கின்றான். ''முந்தி வந்தவன் நான்,'' எனக்கே உதவி வேண்டும்!'' என்று கேட்டும் துரியோதனனுக்கு உதவி கிட்டவில்லை

முந்திச் சென்று விட்டால், சீனாவை மடக்கி விடலாம் என்று எண்ணித்தான் போலும் புஷ் முந்திவிடப் பார்த்தார். சீனாவிற்குத் தலையிடி கொடுத்துவரும் திபெத்

### - மூனசீன -

துக்கு அமெரிக்காவிலே ஆதரவு உண்டு. ஆனால் அது பற்றி புஷ் வாய் திறக்காது நல்ல பிள்ளையாக நடந்து கொண்டார்.

சீனாவிலே அதிக சுதந்திரம் கோரும் எதிர்ப்பாளருக்குச் சாதகமாக 700 அமெரிக்கர்கள் ஒப்பமிட்டுக் கடிதம் வெளியிட்டார்கள்; அதைப் பற்றியும் பேச்சில்லை!

ஆனால், அந்தப் பயணத்தில் இறுதிநாள் விருந்து நிகழ்ச்சியில் அவர் நடந்து கொண்ட விதம் அவர் காலை இடறி விட்டது.

நடந்தது என்ன? இறுதி நாள் விருந்திற்கு கொள்கை எதிர்ப்பாளரான விண் பௌதிக விஞ்ஞானி பாங் என்பாரையும் அழைத்திருக்கிறார், தமது நட்பைத் தெரிவிக்க சும்மா விடுவார்களா சீன அதிகாரிகள்? விருந்து நடந்த விடுதிக்குப் பாங் செல்ல அனுமதிக்கப்படவில்லை.

அது மாத்திரமல்ல, பல கட்சி அரசியல் பற்றிப்பேசிக் குழப்ப வேண்டாம் எனக் கட்சித் தலைவர் சாவோசியாங் மூகத்தில் அறைந்தது போற் கூறிவிட்டார்.

அவசரக் கோலமாகச் சென்று காரியத்தைக்கெடுத்து விட்டாரே புஷ் என்று அமெரிக்காவிலே கண்டனக் குரல் எழுப்பியது. எனவே தான் நேட்டோ உச்சி மாநாடு வெற்றி என்று புது நம்பிக்கை கொடுத்திருக்கிறார்.

அரசியற் பயணங்கள் முடிவதில்லை; தொடர்ந்தும் நடக்கும்; அரசியல் மாற்றங்களை ஏற்படுத்தும்!

## மலரும் நினைவுகள்

# "ஹோமியோபதி மூலம் மனநோயை மாற்றலாம்"

### கா. யோகநாதன்

ஹோமியோபதி சிகிச்சை பற்றி வடபகுதியில் மக்கள் தற்பொழுது அதிகம் தெரிந்துள்ளார்கள்; ஆர்வம் காட்டி வருகிறார்கள். இச் சிகிச்சை உலகில் பல நாடுகளிலும் எமது நாட்டின் தென்பகுதியிலும் பிரபல்யம் அடைந்திருக்கிறது.

''ஆருத புண்; மாருத நோய், தீராத வியாதி, கைவிடப்பட்ட காக்கைவலி, கட்டிகள், காலங்கடந்த வாதம், வயிற்றுவலி, புற்று நோய், மனநோய், சர்மரோகங்கள், மலட்டுத் தன்மை, மூலவியாதி, இத்தனைக்கும் இப்போது நல்ல பலனளித்து வருவது இந்த ஹோமியோபதி.

யாழ். அரசினர் வைத்தியசாலையிலும், கொழும்பு பெரியாஸ்பத்திரியிலும், வேலூர் ஆஸ்பத்திரியிலும், கழுத்து நரம்பு இறுக்கத்திற்கு சத்திர சிகிச்சைதான் ஒரேவழி என்று என்று தெரிவித்த பின்னர், சத்திரசிகிச்சை செய்யாமலேயே ஒரு சில மாதங்களில் ஹோமியோபதிகைகொடுத்து அந்த நோயாளி சுகமடைந்தார்.

ஹோமியோபதி டாக்டர் எம். வி. தில்லைச்சந்திரன், கந்தர்மடத்திலுள்ள அவரது கிளினிக்கில் அண்மையில் சந்தித்போது இதனைதெரிவித்தார். இவர் ஒரு பதிவுபெற்ற ஹோமியோபதி வைத்தியர். 25 வருடங்களாக சிகிச்சையளித்துவருபவர்.

### வைத்திய பரம்பரை

இவரது குடும்பம் மூன்று தலைமுறை வைத்திய பரம்பரையாகும். இவரது தந்தை ஒரு வைத்தியர். மகள் வைத்தியத் துறையில் பணியாற்றி வருகிறார்.

ஹோமியோபதி வைத்தியம் என்றால் என்ன? இது எனது கேள்வி.

''இதுஒரு உயர்ந்தஜேர்மன் நாட்டு வைத்திய முறையாகும். இந்த வைத்தியத்தை 18ம் நூற்றாண்டில் டாக்டர் சாமுவேல் ஹானிமன் என்ற ஜேர்மன் நாட்டவர் கண்டு பிடித்தார் என்றார் டாக்டர் தில்லைச்சந்திரன்.

இந்த வைத்தியத்தின் தத்துவம் என்ன?

''சுகதேகி ஒருவர் என்ன மருந்தை அதிகம் பாவிக்கிறாரோ அதனால் ஏற்படும் நோயை ஹோமியோபதி முறைப்படி வீரியப்படுத்திக் கொடுத்தால் சுகமாகும்''

### கைவிடப்பட்ட நோயாளிகள்

'அரசாங்கஆஸ்பத்திரிகளில் கைவிடப்பட்ட நோயாளிகள் பலருக்கு சிகிச்சை அளித்து வெற்றிபெற்றிருக்கும் டாக்டர் இதற்கு ஆதாரமாககுணமடைந்த நோயாளிகள் அனுப்பிய பாராட்டுக் கடிதங்களைப் பத்திரப்படுத்தி வைத்துள்ளார்.

74 ஏப்ரல் 2ம் திகதி அனுப்பப்பட்ட கடிதம் ஒன்று என் கண்ணில் பட்டது. அது ஒரு பெண்ணால் எழுதப்பட்டது. அதுபற்றி கேட்டேன்;

''இப்பெண் தேகவலி, குத்துழைவு, பெலயீனம், மூல வியாதியால் அவஸ்தைப்பட்டு பல வைத்தியங்களும் செய்தார். பலன் இல்லை. கடைசியில் 3 மாதம் ஹோமியோபதி சிகிச்சை நடந்தது. சுகமாகி இன்றுகூட அந்தத் தாயார் நடமாடித்திரிகிறார்'' எனறார்.

''இதனைப்போல் வேறுஏதாவது?''

''கைவிடப்பட்ட புற்று நோய் 'கேஸ்' ஒன்று. இவர் பாஷையூரைச் சேர்ந்தவர். வயிற்றில புற்றுநோய், இரத்தக் கசிவு, எதுவும் சாப்பிட முடியாது. அரசாங்க ஆஸ்பத்திரியில் வைத்திய நிபுணர் மேற்பார்வையில் 6 மாதம் சிகிச்சை நடந்தது. பயன் இல்லை. தனியார் வைத்திய சாலையிலும் பல மாதங்கள். கடைசியில் ஹோமியோபதி சிகிச்சை 5 மாதம் நடந்தது. படிப்படியாகச் சுகம் கிடைத்து இன்றும் கடற்றொழில் செய்கிறார்.''

''ஏதாவது மறக்கமுடியாத சம்பவங்கள்?''

''ஒருவருக்கு கழுத்தில் நரம்பு இறுக்கம் ஏற்பட்டது. யாழ். ஆஸ்பத்திரியில் 3மாதம் சிகிச்சை பெற்றார். சுகம் இல்லை. பின்கொழும்பு பெரிய ஆஸ்பத்திரி, அதன் பின் வேலூர் ஆஸ்பத்திரி. மூன்று இடத்திலும் சத்திர சிகிச்சை தான ஒரே வழி என்று கூறி விட்டனர். நோயாளி புட்டபர்த்திக்குச் சென்ற சமயம், போபால் டாக்டர் ஒருவரைச் சந்திக்க நேர்ந்தது. ஹோமியோபதி சிகிச்சை செய்யுமாறு அந்த டாக்டர் ஆலோசனை கூறினார். ஒரு மாதம் என்னிடம் சிகிச்சை பெற்றார். சுகம் கிடைத்தது.

''எங்கிருந்தெல்லாம் சிகிச்சைக்கு வருகிறார்கள்?''

'வடபகுதியிலிருந்து மட்டுமல்லாது கொழும்பு, மன்னார் மற்றும் பல இடங்களிலிருந்தும் வருகிறார்கள்.

கேரளாவில் பயிலும் யாழ்ப்பாண மாணவர் ஒருவர் தீராத நோயினால் பாதிக்கப்பட்டவர். அங்கிருந்து இங்குவந்து சிகிச்சை பெற்றார். சுகமடைந்துள்ளார். இதேபோல்சென்னை கலாஷேத்திராவில் பயிலும் மாணவியும் இங்கு வந்து சிகிச்சை பெற்றுச் சுகமடைந்தார்.

மறக்கமுடியாத வேறு சம்பவம்?''

அரச வைத்தியசாலையில் கைவிடப்பட்ட ஒருபெண் என்னிடம் சிகிச்சை பெற்று இன்று [illegible] இருக்கிறாள் தான்.

(7-ம் பக்கம் பார்க்க)

### உத்தமன்- வித்தகன்

'நல்லவர்' என்ற சொல் இன்று திறமை இல்லாதவர் என்ற பொருளைக் குறித்து நிற்கிறது. மனிதன் நல்லவனாக இருந்தால் மட்டும் போதாது. அவன் வல்லவனாகவும் இருத்தல் வேண்டும். ஆனால் உலகில் நல்லவர்கள் பலர் வல்லமை இல்லாதவர்களாகவும், வல்லவர்கள் பலர் நல்லவர்கள் இல்லாமல் இருப்பதும் காணப்படுகிறது. இதனைவேறு வகையில் காண வேண்டுமானால் மனிதன் உத்தமனாகவும் வித்தகனாகவும் இருக்க வேண்டுமென்றும் கூறலாம். இதனை அருணகிரிநாதர் 'மனத்தால் உத்தமனாகி மதியால் வித்தகனாகி' என்று குறிப்பிட்டு விளக்குகின்றார்.

## ஞாயிறு மஞ்சரி

# மரங்களின் ஆயுதங்கள்!

மனிதர்களைப்போலவே தங்களைப் பாதுகாத்துக்கொள்ள தாவரங்களும் ஆயுதங்களைத் தம்வசம் வைத்திருக்கின்றன என்று கூறினால் ஆச்சரியப் படுவீர்கள். ஆனால் இது உண்மை.

தாவரங்கள் தாம் உயிர் வாழவும் தமது தாவர இனத்தைப் பெருக்கிக்கொள்வதற்கும் தம்முடைய உருவத்திலேயே ஆயுதங்களைத் தோற்றுவிக்கின்றன. கூரிய முட்கள், செதில்கள் என்பன போன்ற உடலுறுப்புக்களையும், தம்மைப் பாதுகாத்துக்கொள்ளக் கூடிய இரசாயனங்களையுமே அவை தமது ஆயுதங்களாகப் பயன்படுத்துகின்றன.

புகையிலைச்செடி நிகோடின் என்ற நச்சினை உருவாக்குகின்றது. இந்த நிகோடின வாசனை பட்டாலே புகையிலைச் செடியில் உட்கார்ந்திருக்கிற வண்டுகள் செயலற்றுப்போய் விடும். பெரும்பாலான தாவரங்கள் தமக்கு இடையூறு விளைவிக்க வருகின்ற எதிரிகளை செயல் இழக்க வைத்துவிடுகின்றன.

இன்னும் சில மரங்கள், எதிரிகள் தம்மைத் தாக்கும்போது ஏனைய மரங்களுக்கு எச்சரிக்கை செய்துவிடுகின்றன. சிவப்பு ஆல்டர், வில்லோ போன்ற மரங்களைக் கம்பளிப் பூச்சிகள், புழுக்கள் என்பன தாக்குமானால் உடனே அவை ஏனைய மரங்களை எச்சரிக்கின்றன. இராசாயனங்களைப் பெருக்கி ஏனைய மரங்களை எச்சரிக்க அவை, தமது இலைகளில் டானின்களைக் கூடுதலாக நிரப்புகின்றன. இவை பூச்சி, புழுக்களுக்குப் பிடிக்காதது. இதனால் இந்த இலைகளைத் தின்னாது அவை அம் மரங்களை விட்டுப்போய்விடுகின்றன.

தொகுப்பு:- க. கனகராசா.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# "ஆற்றல் திறமை அறிந்து வாய்ப்பளிக்க வேண்டும்"

(மானிப்பாய்)

"ஒரு நாட்டின் முன்னேற்றம், நேரத்தை எவ்வாறுநாம் பயன்படுத்துகின்றோம் என்பதிலேயே பெரிதும் தங்கியிருக்கின்றது. ஒவ்வொருவரும் தத்தமக்குஒப்படைக்கப்பட்ட கடமையை ஒழுங்காகச் செய்தால் சமூக முன்னேற்றம் தடையின்றி நடைபெறும்."

இவ்வாறு மருதனுமடம் கோட்டக்கல்வி அதிகாரி திரு. குலசேகரன் சுன்னுகம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் கிளிநொச்சிக்கு இடமாற்றலாகிச் செல்லும் மானிப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. எஸ். தனஞ்செயனுக்கு அளிக்கப்பட்ட பிரிவுபசார வைபவத்தில் கலந்துகொண்டு உரைநிகழ்த்துகையில் கூறினுர்.

திரு. குலசேகரன் மேலும் பேசுகையில்; திரு. தனஞ்செயன், அனுபவங்கள்மூலமாக நம்மைத் திருத்திக் கொள்ளலாம் என்பதனை வலியுறுத்திய ஒரு தரமான அதிகாரி. அத்தோடு மற்றவர் மனம் புண்படாது நிர்வாகம் செய்து தமது கருமங்களில் வெற்றி பெற்றவர்" என்ருர்.

ஒவ்வொருவரும், தாமே தமது பொறுப்புக்களை உணர்ந்து செயல்பட்டால் விஷயங்கள் சீராக நடைபெற வழி ஏற்படும் என்றும் அவர் கூறினுர்.

இவ்வைபவத்துக்குத் தலைமை வகித்து உரை நிகழ்த்திய ஸ்கந்தவரோதயா கல்லூரி அதிபர் திரு. பொ. நாகரத்தினம் தமது உரையில், திரு. தனஞ்செயன் சேவை மனப்பான்மையோடு கருமமாற்றியவர் என்றும் அமைதியான சுபாவமும் ஆழமான சிந்தனையும் உள்ளவரென்றும், இதனுலேயே அவர் பலரது மதிப்பைப் பெற்றுக்கொண்டுள்ளார் என்றும் குறிப்பிட்டார்.

திரு. தனஞ்செயன் தமக்களிக்கப்பட்ட உபசாரத்துக்கு நன்றி தெரிவித்து உரையாற்றுகையில்; நல்லதொரு சூழ்நிலையை அமைத்துக்கொடுப்பதன்மூலமே சிறந்த பலாபலன்களை எதிர்பார்க்கமுடியும் என்றும் ஒவ்வொருவரது ஆற்றல், திறமை இவற்றை அறிந்து அவர்களுக்குரிய வாய்ப்புக்கள் அளிக்கப்பட்டால் அவர்கள் மட்டும் வளர்வதோடல்லாமல் சம்பந்தப்பட்ட எல்லோருமே வளர்ச்சிபெறமுடியும் என்ருர்.

"மானிப்பாய் வட்டாரம் தமது இதயத்திலிருந்து என்றுமே நீங்காத ஒரு வட்டாரம்" என்றும் அவர் குறிப்பிட்டார்.

மானிப்பாய் வட்டாரத்தைச் சேர்ந்த பல கல்லூரி அதிபர்கள், ஆசிரியர்கள் ஆகியோர்இவ்வைபவத்தில்கலந்து கொண்டார்கள்.


# ஆங்கிலம்

## பேச வேண்டுமா?

கூச்சமின்றி சரளமாக ஆங்கிலத்தில் பேச வேண்டுமா? பிறரைப்போல் நாமும் ஆங்கிலம் சரளமாகக் கூச்சமின்றிப் பேச ஆசைப்படுகிறீர்களா? கவலையை விடுங்கள்! புதுமையான முறையில் தபால் மூலம் தமிழில் ஆங்கிலம் படியுங்கள். எளிய அஞ்சல் வழிப்பயிற்சி. தமிழ் தெரிந்த யாவரும் சேரலாம்.

## Bright Training Centre இல் படித்த மாணவர்களின் கருத்து

O தபால் மூலம் ஆங்கிலம் கற்று ஒருபோதும் கதைக்க முடியாது என சிலர் சொல்ல கேட்டிருக்கின்றேன், ஆனுல் உங்களின் உளவியல் ரீதியில் அமைந்த பாடங்கள் எனது இலட்சியத்தை அடையவும், பய உணர்வையும் அகற்றிவிட்டது.

செல்வி பாத்திமா சனிமா
எலுவில, பாணந்துறை.

O தங்களின் ஆங்கில கல்வி விருத்தி யாழ், மக்களுக்கு ஓர் வரப்பிரசாதமாக அமைந்துள்ளது. நானும் உங்களின் பலாபலன்களை பெற்ற மாணவியரில் ஒருவர்.

செல்வி பிரேமாவதி செல்லையா
உரும்பிராய் வடக்கு, உரும்பிராய்.

O இப்போது எனக்கு ஆங்கிலம் பேசமுடியும் எனும் மனத்திடத்தை உங்கள் தபால் மூலம் கல்வி ஏற்படுத்தியுள்ளது,

செல்வி நிர்மலா தங்கவேலு
அப்புத்தளை,

O ஆங்கிலத்தை இலகுவாக மாணவர்களின் தராதரத்திற்கேற்ப ஆரம்பத்தில் இருந்து தபாலில் கற்றுக் கொள்ளக்கூடிய சிறந்த திட்டம் உங்களுடையதே.

செல்வன் எஸ். எம். ராசா
ஏழாலை வடக்கு, ஏழாலை.

O பிறைட்றெயினிங் சென்ரரின் ஆங்கில பாடப் பயிற்சி மூலம் நான் நல்ல பயன் அடைந்துள்ளேன்.

செல்வன் ரி. கேதீஸ்வரன்
457, கே. கே. எஸ். றேட், கோண்டாவில்.

O குறுகிய காலத்துக்குள்ளே ஆங்கிலக்கல்வியை திறம்படக் கற்றுக்கொடுக்க உங்களின் பிறைட்ரெயினிங் சென்ரரால்தான் முடியும்.

செல்வன் ச. செல்வகுணச்சந்திரன்
ஒடக்கரை, பருத்தித்துறை.

**எமது கல்வித்திட்டம் பற்றி மேலதிக விபரங்கள் அறிய முத்திரையொட்டிய தபாலுறையுடன் தொடர்புகொள்க:**

**BRIGHT TRAINING CENTRE,**

**P. O. Box 162, COLOMBO.**

(எ-274)


# சனசமூக நிலைய சமாஜக் கூட்டம்

(வண்ணுர்பண்ணை)

யாழ்ப்பாண மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாஜத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் இம்மாதம் 18-ம் திகதி யாழ். மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளரினுல் கூட்டப்படவிருக்கிறது.

யாழ்ப்பாணம் முதலாம் குறுக்குத் தெருவிலுள்ள பிரான்ஸ் நட்புறவுச் சங்க மண்டபத்தில் நடைபெறவிருக்கும் இக்கூட்டத்திற்கு ஆணையாளர் திரு. சு. டிவகலாலா தலைமைவகிப்பார்.

யாழ். மாவட்டத்திலுள்ள உதவி அரசாங்க அதிபர்கள் பிரிவுகள் தோறும் இயங்கும் சனசமூக நிலையங்களின் சமாஜங்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் இந்த யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாஜத்திற்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

# கொத்தணி விளையாட்டுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

மன்னுர் விடத்தல்தீவு கொத்தணிப்பாடசாலைக்கிடையேயான விளையாட்டுப் போட்டி எதிர்வரும் 14ந்திகதி மன்னுர் இலுப்பைக்கடவை மகாவித்தியாலயத்தில் நடைபெறும்.

இப்போட்டிகளில் பத்துக்குமதிகமான தமிழ், முஸ்லிம் பாடசாலைகளின் மாணவர்கள் கலந்துகொள்வார்கள்.

# மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

மன்னுர் கோவிற்குளம் தமிழ்வித்தியாலய வருடாந்த இல்லப்போட்டிகள் எதிர்வரும் 25ந் திகதி நடைபெறும். பிரதம விருந்தினராக விடத்தல் தீவு கொத்தணிஅதிபர் ஜனுப் அன்சாரி கலந்து கொள்வார். பரிசளிப்பு விழா மேற்படி வித்தியாலய அதிபர் திரு. சி. கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெறும்.

போட்டிகளை விடத்தல்தீவு கொத்தணி அதிபர் ஜனுப் அன்சாரி ஆரம்பித்து வைப்பார். பிரதம விருந்தினராக மன்னுர் கல்வித்திணைக்கள விளையாட்டதிகாரி கலந்து கொள்வார்.

# உடற்பயிற்சிக் கருத்தரங்கு

(சுன்னுகம்)

உடற்பயிற்சி சம்பந்தமான கருத்தரங்கு ஒன்று யாழ். மாவட்டரீதியில் நடைபெற இருக்கின்றது.

இப்பயிற்சிக் கருத்தரங்கு உடற்பயிற்சி நுணுக்கங்கள், விதிகள் என்பனவற்றை உடற்பயிற்சி பெருத ஆசிரியர்கள் அறிந்துகொள்ளுமுகமாக நடத்தப்பட இருக்கிறது.

உடற்பயிற்சி பெருத ஆசிரியர்களைத் தெரிந்தெடுத்து, ஒவ்வொரு கோட்டக்கல்வி அலுவலகத்திற்கும் பத்துபேர் வீதம் பெயர்களை அனுப்பிவைக்குமாறு உடற்பயிற்சி கல்வி அதிகாரி திரு. த. அருணகிரிராஜா கோட்டக் கல்வி அலுவலக கல்வி அதிகாரிகளைக் கேட்டுள்ளார். இருதினங்கள் நடக்கும் இப்பயிற்சிக் கருத்தரங்கில் பங்குபற்றுவோருக்கு மதிய [illegible] கொள்ளப்படும் [illegible] அறிவிக்கப்பட்டுள்ளது.

# "வெற்றியையும் தோல்வியையும் சமமாக மதிக்க வேண்டும்"

(யாழ்ப்பாணம்)

"வெற்றியையும் தோல்வியையும் சமமாக மதிக்கக்கூடிய மனப்பக்குவம் வேண்டும். இம்மனே பக்குவத்தை விளையாட்டுப் போட்டி ஏற்படுத்துகின்றது. உடற்சுகம், மனச்சுகம், நேர்மை, ஒழுக்கம், ஒற்றுமை, கட்டுப்பாடு, சமரச மனப்பாண்பு போன்ற நன்மைகளையும், உயர்ந்த பழக்கங்களையும் விளையாட்டுப் போட்டிகள் ஏற்படுத்தும். இன்றைய இக்கட்டான நிலையிலும் சிறப்பாக இல்ல மெய்வல்லுநர் போட்டியை நடாத்திய அதிபர் ஆசிரியர்களின் முயற்சியைப் பாராட்டுகின்றேன்" என்று கொக்குவில் ஞானபண்டித வித்தியாலய வருடாந்த மெய்வல்லுநர் போட்டியில் யாழ். கல்வித் திணைக்கள பொறியியலாளர் திரு. எம். ஏ. பிரான்சிஸ் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

யாழ். பல்கலைக்கழக சமுதாய மருத்துவப் பகுதித் தலைவர் வைத்திய கலாநிதி என். சிவராசா பாடசாலைக் கொடியை ஏற்றி போட்டிகளை ஆரம்பித்தார். கொக்குவில் கொத்தணி அதிபர் திரு. அ. பஞ்சலிங்கம், கல்வி அதிகாரி திரு. சு. சிவநாயகமூர்த்தி ஆகியோரும் சிறப்புரையாற்றினர். போட்டியில், குமாரசாமிப் புலவர் இல்லம் முதலாமிடத்தையும், சிவக்கொழுந்து இல்லம் இரண்டாமிடத்தையும், தர்மலிங்கம் இல்லம் மூன்ருமிடத்தையும் பெற்றன. அதிபர் கா. கணேசதாசன் நன்றி கூறினுர்.

# பொன்மாரி நூல் வெளியீடு

(பருத்தித்துறை)

ஆதிசங்கராச்சாரியார் வடமொழியில் எழுதிய "கனகதாரா" என்னும் நூல் தமிழில் "பொன்மாரி" எனவெளிவரவுள்ளது. கனகதாராவை தமிழில் பொன்மாரியாக துன்னுலையைச் சேர்ந்த கவிஞரும், இளைப்பாறிய அதிபருமான திரு. எஸ். செல்லமுத்து மொழிபெயர்த்துள்ளார்.

பகவான் ஆதி சங்கராச்சாரியாரின் 1200வது ஆண்டு நிறைவுவிழாக் காலமான இவ்வருடத்திலேயே பொன்மாரி நூல் வெளியீடு செய்யப்படுகின்றது. இந்நாலுக்கான ஆசி உரையையாழ். மாவட்ட பிரதிக்கல்விப்பணிப்பாளர் செல்வி தி. பெரியதம்பியும், அணிந்துரையை கலாநிதி வித்துவான் க. ந. வேலனும் வழங்கியுள்ளனர்.

பொன்மாரி நூலை இம்மாத இறுதியில் வெளியிடுவதற்கான துரித நடவடிக்கைகள்மேற்கொள்ளப்பட்டுள்ளன.

# நிர்வாகிகள்

(யாழ்ப்பாணம்)

மாரீசன்கூடல் சுப்பிரமணிய வித்தியாலய அபிவிருத்திச் சங்க நடப்பு வருட உத்தியோகத்தர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் திரு. வே. தம்பிராசா, செயலாளர் திரு. வ. மாணிக்கவாசகர், உப செயலாளர் திரு. செ. ஞானசேகரன், தனுதிகாரி திருமதி சி. சின்னத்துரை. நிர்வாக சபை உறுப்பினர்களாக 7 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.


# அறிவொளி

## பிறைட் கல்வி வட்டம்

எமது கல்வி வட்டமானது உயர்தர மாணவர்களின் நலனைக் கருத்திற்கொண்டு ஆரம்பிக்கப்பட்டதாகும். இவ்வட்டத்தின் வெளியீடான "அறிவொளி" மூலம் மாணவர்களை மிகக் குறுகிய காலத்தில் பரீட்சைக்கு ஆயத்தம் செய்யவைப்பதும் அறிவை வளர்ப்பதுமேயாகும்.

இவ்வட்டத்தில் சேரும் ஒவ்வொரு மாணவ/மாணவியும் தங்களுக்கு விருப்பமான கலை/வர்த்தகத் துறை சம்பந்தமான ஒரு பாடத்தின் ஒரு கேள்விக்கான சிறந்த விடையினையும் எழுதி எமது மாணவ கல்வி வட்டத்தில் இணைவதற்காகப் பெயர், விலாசத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படவேண்டும். எமது வெளியீடு ஒவ்வொரு மாதமும் ஒரு **"அறிவொளி"** என்ற ரீதியில் வெளியிடப்படும்.

இத்திட்டத்தில் சேரும் மாணவ/மாணவியர் அடையும் பலாபலன்கள்:

1. ஒரு புத்தகத்தில் 25க்கு மேற்பட்ட சிறந்த விஞவிடையை அறிவொளி உள்ளடக்கியதாக இருக்கும்.
2. அதிசிறந்த விஞவிடை எழுதும் மாணவர் பெயர், விலாசம் எமது வெளியீட்டில் வெளியிடப்படும்.
3. ஒவ்வொரு இதழிலும் சிறந்த விடை என எமது ஆசிரியர் குழுவால் தீர்மானிக்கப்படும் மூன்று கட்டுரைகளுக்கு சிறந்த பரிசுத் திட்டத்தில் பங்குகொள்ளும் வாய்ப்பு அளிக்கப்படும்.
4. இத்தகைய சிறப்புடன் வெளிவரும் அறிவொளி கல்வி வெளியீட்டின் விலை 20/-ஆகும்.

எனவே கல்வி வட்டத்தில் இணைய விரும்பும் மாணவர்கள் எமது அறிவொளி இதழ் 1, 2க்கான கட்டணமாகிய 40/-வை தபாற்கட்டளையாகவோ, காசுக் கட்டளையாகவோ இணைத்து உங்கள் பெயர், விலாசத்துடன் அனுப்பவும்.

காசுக்கட்டளையை இயக்குநர் (DIRECTOR, B. T. C.) எனும் பெயருக்குப் பெறப்படும் கந்தோர் கொழும்பு என எழுதவும்.

**Bright Study Circle**

P. O. BOX, 162, COLOMBO.

(எ-275)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்சோதிடத்தில் இவ்வார பலன்

(11-06-89 தொடக்கம் 17-06-89 வரை)

[இது பொதுவான பலன். சிலருக்கு கூட்டெண் பலம் வாய்ந்ததாயின் அதுவே பலன் செய்யும்.]

## [1]

(1, 10, 19, 28 இல் பிறந்தவர்கள், 1-ம் எண்ணில் பெயர் அமைந்தவர்கள்)

1ம் எண்காரர்களுக்கு இவ்வாரம் சுகதுக்கங் கலந்த வாரமாகும். நினைத்திருக்குங் காரியங்கள் காலதாமதப்படுதலும் உதவி செய்வார்கள் என்று நம்பியவர்கள் கைவிடுதலும் மன அமைதி இன்றியும் வீண் அலைச்சல் மிகுந்தும் காணப்படும். பண வருவாயிருந்தாலும் கடன்பட வேண்டிய சூழ்நிலை. இன்பமும் துன்பமும் மாறிமாறி வரும். புத்திக் கூர்மையுள்ளவர்கள் காலத்தை நல்லபடி தந்திரமாகக் கழிப்பர். வேலைத்தலத்தில் கைக்கெட்டியது வாய்க்கெட்டாது போகும். மனப்போராட்டத்தை வெளியில் காட்டிக்கொள்ளமாட்டார்கள். அதிர்ஷ்டதிகதிகள்: 13, 14, 16.

## [2]

(2, 11, 20, 29 இல் பிறந்தவர்கள் 2ம் எண்ணில் பெயர் அமைந்தவர்கள்)

2-ம் எண்காரர்களுக்கு இவ்வாரம் பலதுறைகளிலும் கஷ்டங்கள் ஏற்பட்டுக்கொண்டேயிருக்கும். வீண் செலவுகளும் எதிர்பாராதபிரயாணங்களும் அலைச்சலும் மிகுந்த காலம். எடுத்ததெற்கெல்லாம் மூளையைப்போட்டுக் குழப்பிக் கொண்டே இருப்பார்கள். சிலருக்கு நரம்பு சம்பந்தமான நோயினால் அவஸ்தைப்பட இடமுண்டு. இன பந்துக்களால் வீண் வம்பில் மாட்ட நேரிடும். காரியாலயத்தில் மேலதிகாரிகளால் தாக்கங்களும் வேலைப்பழுக்களும் அதிகரிக்கும். முதலீடு செய்ய உகந்ததல்ல. வியாபாரமுறைகளில் பிரச்னைகளை எதிர்நோக்க நேரிடும். அதிர்ஷ்ட திகதிகள்: 13, 14, 16.

## [3]

3, 11, 21, 30 இல் பிறந்தவர்கள் 3ம் எண்ணில் பெயர் அமைந்தவர்கள்.

3ம் எண்காரர்களுக்கு இவ்வாரம் காரிய தாமதமும், பொருட்செலவும் ஏற்பட்டாலும் நண்பர்களும் உறவினர்களும் கைகொடுத்து உதவுவர். குடும்பத்தில் அன்னியோன்னியம் இருந்தாலும் இடையிடையே பிணக்குகள் தலைதூக்கும். ஒருசிலருக்கு விபத்து அல்லது வழுக்கிவிழுதல் போன்ற சம்பவங்கள் நிகழ இடமுண்டு. பொறுமையுடன் காரியத்தைச் சமாளிக்க முயல வேண்டும். பிரயாணங்களால் நன்மையுண்டு. மேலதிகாரிகளின் ஆதரவு இருந்தாலும், சகவூழியரின் கஷ்டங்களும் உண்டு. வியாபாரத்துக்குச் சுமாரான காலம். அதிர்ஷ்ட திகதிகள்: 12, 15, 17.

## [4]

4, 13, 21, 22, 31இல்பிறந்தவர்கள் 4ம் எண்ணில பெயர் அமைந்தவர்கள்.

4ம் எண்காரர்களுக்கு இவ்வாரம் அவ்வளவு நல்லதல்ல. நாம் ஒன்றினை நினைக்க தெய்வம் ஒன்று நினைப்பதுபோல் மாறுகவே காரியங்கள் நடக்கும். உங்களுக்கு உதவியவர்கள்கூட முகம் சுழிப்பர். மன அமைதிகுன்றும். நண்பர்களின் உதவி நன்மையாய் இருக்கும். நம்ப நடந்து நம்பி நடவாது உத்தமம். வேலைத்தலம் வேப்பங்காயாய் இருக்கும். சோமபலும், அசதியும் ஆட்கொள்ளும். சுறுசுறுப்புக் குன்றிவிடும். வியாபாரத்தில் போட்டியும் பொறாமையும் தலைதூக்கி, மனநிம்மதியைக் கெடுக்கும். அதிர்ஷ்ட திகதிகள்: 13, 14, 16.

## [5]

5, 14, 23 இல் பிறந்தவர்கள், 5ம் எண்ணில் பெயர் அமைந்தவர்கள்)

5-ம் எண்காரர்களுக்கு இவ்வாரம் மிகவும் அதிர்ஷ்டமானதும் இலாபகரமானதுமாகும். எடுத்த காரியங்கள் எல்லாமே சித்தியாகும். சென்றவிடமெல்லாம் பெயரும் புகழும் கிட்டும். வீட்டில் சுபகாரியங்களும் இனசன கொண்டாட்டமும் நிகழும், குடும்பத்தவர்களில் பிரிந்திருந்தோர் ஒன்றுகூடுவர். வாகனச் சேர்க்கை, பூமி லாபம், புதுமனை கட்டல் என்பன கிட்ட வாய்ப்பு உண்டு, தொழிலகத்தில் வாய்ப்பும் வசதியும் உண்டு. ஒருசிலருக்கு வெளிநாடு செல்ல அனுகூலம் உண்டு. வியாபாரத்தில் தொட்டதெல்லாம் பொன்னானகாலம். அதிர்ஷ்ட திகதிகள்: 11, 12, 15, 17.

## [6]

(6, 15, 24ல் பிறந்தவர்கள், 6-ம் எண்ணில் பெயர் அமைந்தவர்கள்)

6-ம் எண்காரர்களுக்கு இவ்வாரம் லாபகரமானதே. தூரஇடத்தில் இருந்துவரும் கடிதம் உங்களது எதிர்கால வாழ்வை உன்னதமாக்க உதவும். திடீர் அதிர்ஷ்டம், பூமிப்பலன், புத்திரபலன், சேமிப்பு என்பன உண்டாம். மன அமைதியும் அரசாங்க ஆதரவும் போட்டிகளில் வெற்றியும்உண்டாம். கைவிட்டிருந்த சொத்து தானே வந்து சேரும். பொருள் வருமேயன்றி போகாது. குடும்பத்தில் நன்மைகள் விளையும். காரியாலயத்தில் நிம்மதியும் சகலரது ஒத்துழைப்பும் கிட்டும். வியாபாரத்தில் கீரைக்கடைக்கு எதிர்க்கடை இருந்தாலும் உங்களுக்கு இலாபமே அன்றி நட்டமில்லை. அதிர்ஷ்ட திகதிகள்; 11, 12, 15, 17.

## [7]

(7, 16, 25 இல் பிறந்தவர்கள், 7-ம் எண்ணில் பெயர் அமைந்தவர்கள்.)

7-ம் எண்காரர்களுக்கு இவ்வாரம் அதிர்ஷ்டமான காலமல்ல. சாணேறி முழம் சறுக்குகின்ற கதைதான். என்ன முயற்சி எடுத்தாலும் பலிதமடையாது. மனவமைதி குன்றி மற்றையோரின் ஏளனத்துக்கு இலக்கிதமாக வேண்டிவரும். ஏமாறவேண்டிய காலமாகையால் கடன் கொடுக்கவேண்டாம். நீங்கள் நன்மை செய்தாலும் கேட்பது தீமையாகவே இருக்கும். சகோதரங்களுக்கிடையில் கூட அபிப்பிராய பேதங்கள் ஏற்பட வாய்ப்புண்டு. தொழிலகத்தில் நிம்மதிகுன்றும். வியாபாரத்தில் பெரும் நட்டமும் பகையும் உண்டாகும். இறைவணக்கத்தோடு மௌனமாயிருத்தலே சிறந்ததாகும். அதிர்ஷ்ட திகதிகள்: 13,14,16

## [8]

(8, 17, 26 இல் பிறந்தவர்கள், 8-ம் எண்ணில் பெயர் அமைந்தவர்கள்)

8-ம் எண்காரர்களுக்கு இவ்வாரம் புத்துணர்வான காலம். மனவிரக்தி எதிலும் தடையும் தடங்கலும் என்பன நீங்கி பொற்காலம் பிறக்கிறது. நினைத்த காரியம் அதிக முயற்சியின்றிச் சித்தியடையும், பேரும் புகழும், மதிப்பும், கௌரவமும் உண்டாம். பண வருவாய், நூதனமான பொருள் சேர்தல், புதுமனைப் பிரவேசம், குடும்ப சுகம், விருந்தும், சந்தோஷமும மனதை இதப்படுத்தும். உங்களை வெறுத்தவர் கூட உதவிக்கு வருவர். காரியாலயத்தில் இடைஞ்சல்கள் நீங்கி சுமுகமான சூழ்நிலையும் குறிப்பாக எதிர்பாலாரின் அன்பும் ஆதரவும் உண்டு. வியாபாரத்தில் உற்சாகமான வருவாய் கொடுக்கும். கறுப்பு நிறப் பொருள் விற்பனையில் பணம் குவியும், அதிர்ஷ்ட திகதிகள்: 11, 12, 15, 17.

## [9]

[9, 18, 27 இல் பிறந்தவர்கள், 9ம் எண்ணில் பெயர் அமைந்தவர்கள்.]

9ம் எண்காரர்களுக்கு இவ்வாரம் உன்னத காலமாகும நீங்கள் செய்யும் எக்கருமமும் உங்களுக்குச் சாதகமான பலனையே தரும். தீமை செய்தால் கூட அது நன்மையாக மாறிவிடும். அரசின் ஆதரவும், அந்நிய மனிதரின் ஒத்தாசையும் நண்பர்களின் உதவியும் உங்களை உயர்த்தும், மனச்சந்தோஷம் தாராளமாக உண்டு. பூமி சேர்க்கை, ஆடை ஆபரண சேர்க்கை, வாகனப் பலன் ஆகியன உண்டாம். நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்த கடிதம் நற்செய்தியை கொண்டு வரும். காரியாலயத்தில் சகலரதும் ஒத்துழைப்பும் மெச்சுதலும் கிட்டும். வியாபாரத்தில் வங்கி நிலை சீராக இருக்கும். புதிய முதலீடுகள் நன்மை பயக்கும். கவலையை விட்டுக் காரியத்தில் இறங்கவும். அதிர்ஷ்ட திகதிகள்: 11, 12, 15, 17.

சோதிடர்
எஸ்.சி.எஸ். சிதம்பரநாதன்

நியூசாந்தி யாழ்நகர்
தினசரி 10-30, 2-30, 4-45
20th Century Presents
VAN RYANS
EXPRESS
(C/scope)

ஹரன் சினிமா
(யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30
சத்தியராஜ்—பிரபு
நடித்த
சின்னத்தம்பி
பெரியதம்பி

## இடமாற்றம் ரத்து

(புங்குடுதீவு)

புங்குடுதீவு மேற்கு இறுப்பிட்டி ஸ்ரீ சித்திவிநாயகர் மகாவித்தியாலயத்தில் அதிபராக கடமையாற்றிய திரு. நா. தர்மலிங்கத்திற்கு கிடைத்த இடமாற்றம் ரத்தாகி மீண்டும் அவரே அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

பெற்றோர்களும் பொது ஸ்தாபன அமைப்புகளும் இடமாற்றத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்ததைத் தொடர்ந்து இடமாற்றம் ரத்துச்செய்யப்பட்டது.

## மொழியும்

(3ம் பக்கத் தொடர்ச்சி)

ஆற்றிய வங்கி முகாமையாளர் திரு. ந. சிவபாலகணேசன், பாடசாலை ஸ்தாபகர் சுந்தரமூர்த்தியின் பெருமைகள், வழிகாட்டல்கள் பற்றி உரையாற்றினர். தெல்லிப்பழை, கொத்தணி அதிபர் திரு. என். ஸ்ரீ புஷ்பநாதன், திரு. இ. சபாரத்தினம், திரு. சு. ஏழர்நாயகம் ஆகியோரும் [illegible] நன்றியுரையுடன் [illegible] நடந்தன.

## இப்படியும் நடக்கிறது

சும்மா சொல்லக் கூடாது. நமது கல்வி, கலாசாரம், செய்தித்துறை அமைச்சர் திரு. லொக்குபண்டாரவுக்கு அடிக்கடி நல்ல யோசனைகள் வருகிறது.

அவரின் யோசனை வரிசையில் 'லேட்டஸ்ட்' இது?

நீண்டகாலமாக ஆரம்பப் பாடசாலை மாணவர்களிடையே பழக்கத்தில் இல்லாதிருந்த சிலேட், கல்குச்சி முதலியன மீண்டும் அமுலுக்கு வரப்போகிறது.

ஆரம்ப பாடசாலை மாணவர்களிடையே இவற்றை அறிமுகப்படுத்தும்படி கல்வி, கலாசார, செய்தித்துறை அமைச்சர் திரு. லொக்குபண்டார சகலபிரதேச கல்விப் பணிப்பாளர்களுக்கும் உத்தரவிட்டுள்ளார்!

இம்மாணவர்கள் கொப்பி, பென்சில், பேனை முதலியவற்றை ஆரம்பம் முதல் பாவித்து வருவதால் பலபெற்றோர்களுக்கு பெருமளவு செலவு ஏற்படுகிறது என்றும் மாணவர்களிடையே கையெழுத்தும் மோசமாக விளங்குகிறது என்றும் கண்டுபிடிக்கப்பட்டதனாலேயே புதிய நடைமுறை அமுலுக்கு வருகிறதாம். அமைச்சரின் அடுத்த 'கல்விப் புரட்சி'யைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

"ஊடுருவி"

## மலரும் நினைவுகள்

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

'ஆயுர்வேதத்திற்கும், ஹோமியோபதிக்கும் தொடர்புள்ளதா?''

''எவ்வித தொடர்பில்லை, அது வேறு, இது வேறு.''

ஹோமியோபதிக்கும் பத்தியம் உண்டா?''

பத்தியமில்லை. நிரந்தரமாக குணம் தரும். பக்கவிளைவு கிடையாது.

இந்த வைத்தியத்தில் உங்களுக்கு என் நாட்டம் ஏற்பட்டது?''

''70ம் ஆண்டு பாஷையூரில் கிளினிக் இருந்தது மூலவியாதியால் ஒரு பெண் அவஸ்தைப் பட்டார். இந்த முறையில் சிகிச்சையளித்தேன். வெற்றி கிடைத்தது! இதனை கேள்விப்பட்டு பின் வேறு நோயாளிகளும் வந்தனர்.''

இதுவரைக்கும் எத்தனை பேருக்குச் சிகிச்சையளித்திருக்கிறீர்கள்?

''1983ம்ஆண்டு மட்டும்ஆயிரக்கணக்கானோருக்கு. இதில் மனநோயாளிகள்தான் அதிகம், நாட்டின் நிலைமை காரணமாக பலர் மன நோய்க்கு ஆளாகின்றார்கள். அரசாங்க ஆஸ்பத்திரியில் கைவிடப்பட்ட பலர், இங்கு வந்து சுகமடைந்துள்ளனர். மனோநிலை ரீதியாகவும், உடலியல் ரீதியாகவும் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஹோமியோபதி கை கொடுக்கும்''

''எப்படியான மனநோய்களுக்கு சிகிச்சையளித்திருக்கிறீர்கள்.

மனநோயில் பல பிரிவுகள் உள்ளன. தற்கொலைக்குக் காரணம் மன நோய்தான். தற்கொலை செய்ய முயற்சிப்பவர்களை ஹோமியோபதி சிகிச்சைக்கு உட்படுத்தினால் மீண்டும் தற்கொலை எண்ணமே வராது.

'மலட்டுத்தன்மைக்கு ஹோமியோபதி பயனளித்துள்ளதா?'

''யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவருக்கு திருமணமாகி பத்து வருடங்களுக்கு மேலாக பிள்ளைச் செல்வம் இல்லை. பல டாக்டர்களைச் சந்தித்து ஆலோசித்தார். பயனில்லை. பின் அத் தம்பதிகளுக்கு ஹோமியோபதி சிகிச்சையளிக்கப்பட்டது. இப்பொழுது அவர்களுக்கு ஒரு குழந்தையிருக்கிறது''என்றார்.

தற்போது பிரான்சிலிருக்கும் அவர் டாக்டருக்கு அனுப்பியிருந்த கடிதத்தில் நன்றி தெரிவித்திருக்கிறார்.

'இதேபோல் வேறு சம்பவங்கள்?'

கொடிகாமப் பகுதியிலுள்ள வர்த்தகர் ஒருவருக்கு 10 வருடங்களாகப் பிள்ளைச்செல்வம் இல்லை. அவர்களுக்கு ஹோமியோபதி சிகிச்சையளித்தேன். அதன்பின் குழந்தையொன்று பிறந்துள்ளது என்றார்.

ஹோமியோபதி சிகிச்சை தனிப்பட்ட, கைவிடப்பட்ட நோய்களுக்கு நிரந்தரமாகப் பலனளிக்கும் என்பது டாக்டர் பல்வேறு ஆதாரங்களுடனளித்த விபரங்களிலிருந்து தெரியவந்தது.

## ஆரோக்கிய வாழ்வுக்கு

(நேற்றைய தொடர்ச்சி)

### பச்சி மோத் தாசனம்

மல்லாந்து படுத்து கால்களை அணைத்துக் கொண்டு கைகளை இருபக்கங்களாலும் உள்ளங்கைகள் நிலத்தில் படிந்து இருக்க, படுத்திருந்து கைகள் இரண்டும் தலைக்குப் பின்னால் நீட்டியபடி படுத்திருந்து சுவாசத்தை உள்ளிளுத்தவாறு, கைகளை காதுள் ஓரமாக அணைத்து தலை,உடம்பு, கைகள் ஒருமித்து எழும்பி சுவாசத்தை வெளியே விட்டபடி முன்குனிந்து கைகளால் கால் பெருவிரல்களைப்பிடித்து 4 சுவாசம் உள் இழுத்து வெளிவிட்டுத், திரும்பவும் கைகளைக் காது ஓரமகா அணைத்தபடிபின்நோக்கி நிலத்தில் படுக்கவேண்டும்.

சுவாசம் ஓய்வு எடுத்துத் திரும்பவும் சுவாசத்தை உள்ளிளுத்துக், கைகளையும் உடலையும் தூக்கிக் குனிந்து கால் பெருவிரல்களைப் பிடித்த வண்ணம் முழங்கைகள் நிலத்தில் பட, முகம் முழங்கால்களைத் தொட்டுக் கொண்டு 4 மூச்சுக்கள் விட வேண்டும். இதே மாதிரி 5 தடவைகள்செய்து பின்பு ஓய்வு எடுக்க வேண்டும்.

### பச்சி மோத்நாசனத்தின் பலன்கள்

ஆண்களைவிட பெண்களுக்கு முக்கியமான மருந்தாகும். கர்ப்பப்பை சுத்திகரிக்கப்படுகிறது. நீரிழிவு நோய் வராமல் தடுக்கப்படுகிறது. மாதவிடாய் காலத்தில் வரும் இடுப்பு வலி, வயிற்றுவலி முதலிய நோய்கள் வராமல் தடுக்கும் சக்தி உடையது. பொறுமையுடன் செய்து வந்தால் மலட்டுத்தன்மை நீங்கி பிள்ளைப்பேறு உண்டாகும். இளந்தொந்தி, பெருகதொந்தி, ஊளைச் சதைகள் கரைந்துவிடும். இடுப்பை இறுகச் செய்துஅழகைத்தரும். அரும்பெரும் மருந்து மூலவியாதி வராமல் தடுக்கும்;

### ஹலாசனம்

இரண்டு கால்களையும் நீட்டி அணைத்த வண்ணம் 2 கால்களுக்கும் பக்கத்தில் உள்ளங்

(8-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மட்டுவிலில் தேடுதல்

(மட்டுவில்)

மட்டுவில் மகாவித்தியாலயத்தில்முகாமிட்டிருந்த அமைதிப்படையினர் இரு தினங்களாக இப்பகுதியில் பெரும் தேடுதல் நடத்தினர்.

மட்டுவில் மகாவித்தியாலயத்தைச் சுற்றி சுமார் ஒரு மைல்சுற்றளவிற்கு சகலவேலிகளும் வெட்டி வெளியாக்கப்பட்டுள்ளன.

இங்கு சில பகுதிகளில் மக்கள் தத்தம் வீடுகளைவிட்டு வெளியேறி வேறு இடங்களுக்குச் சென்றுள்ளனர்.

### ஏழு மாணவர்கள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

னினால் சேதமாக்கப்பட்டுள்ளதாகவும், பிரயாணிகள் பலர் கல்வீச்சுக்களினால் பலத்த காயமடைந்து ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### கடமை செய்யாத

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதேபோல ஐந்துநாட்கள் கடமை செய்யாமல் மூன்று நாட்கள் வேலை செய்யும் ஊழியர்களுக்குரிய சம்பளத்தை காலதாமதமாக்கிக் கொடுப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டு வருகிறது.

### இலங்கைத்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஜனநாயக உரிமைகளை ஏற்படுத்திக் கொடுப்பதும் இலங்கை அரசின் கடமை என்றும் மேற்படிக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

## உணவு முத்திரை விநியோகம்

(வண்ணார்பண்ணை)

யாழ்ப்பாணம் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள கிராமசேவை அலுவலர் பிரிவுகளில் உணவு முத்திரைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

கொழும்புத்துறை கிராம சேவை அலுவலர் பிரிவில் 85 வீதமானவர்களுக்கு உணவு முத்திரைகள் வழங்கப்பட்டு விட்டதாக இப்பிரிவு கிராம சேவைஅலுவர் தெரிவித்தார்.

இப்பிரிவில் முத்திரை பெற்றவர்கள் இவ்வாரத்திற்கான உணவுப் பொருட்களையும் பெற்றுவருகின்றனர்.

## படை விலகல்: 'ஈரோஸ்' கருத்து

(சென்னை)

வடக்கு-கிழக்கிலிருந்து இந்திய அமைதிப்படை வாபஸ் பெறப்படுவது தொடர்பாக 'ஈரோஸ்' அமைப்பு சென்னையில் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளதாக 'ஏ. எப். பி,' செய்தி ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

இந்திய அமைதிப்படை இலங்கையிலிருந்து வாபஸ் பெறப்பட வேண்டுமென்றும். அதற்கு முன் சகலதரப்பும் பேச்சுவார்த்தை ஒன்றில் ஈடுபட்டு இதற்கான கான கால அட்டவணை ஒன்றை குறிப்பிடவேண்டுமென்றும் 'ஈரோஸ்' தெரிவித்துள்ளதாகவும் அச்செய்திகூறுகிறது.

## முதலாம் ஆண்டு அனுமதி

(யாழ்ப்பாணம்)

ஆறு வயதிற் குட்பட்ட மாணவர்களே முதலாம் ஆண்டில் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும் என்ற சுற்றறிக்கை ஒன்று அனைத்துப் பாடசாலைகளுக்கும் அனுப்பிவைக்கப்படவுள்ளது.

இந்தியாவிலிருந்து தாயகம் திரும்பியுள்ள மாணவர்களுக்கும் இதுவே நடைமுறைப் படுத்தப்படுமென்று கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## புங்குடுதீவில் சடலம்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு மேற்கு நுணுக்கலைச் சேர்ந்த இ. சதாசிவம் (வயது 21) என்பவர் இனம் தெரியாதவர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இவரது சடலம், துப்பாக்கிச்சூட்டுக்காயங்களுடன் புங்குடுதிவு ஆலடி வீதியில் காணப்பட்டது.

இறந்த இக்குடும்பஸ்தர் ஒரு பிள்ளையின் தந்தையென தெரிவிக்கப்பட்டது.

### ஆசிரியர்கள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுள்ளது.

அப்பாடசாலையில் கல்வி கற்பிக்கும் இரு ஆண் ஆசிரியர்களே தாக்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

### யாழ்ப்பாணம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மேற்படி நபரின் சடலம் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டு விசாரணை முடிவில் நேற்று சகோதரரிடம் ஒப்படைக்கப்பட்டது. (கு)

### பல்கலைக்கழக

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒருவரும், மற்றொரு அதிகாரியும் மாணவர்களால் பணயக் கைதிகளாகக் கடத்திச் செல்லப்பட்டு, ஜீப் பல்கலைக்கழக விஜயவர்த்தன மண்டபம் முன்பாகத் தீயிட்டுக் கொளுத்தப்பட்டது.

இதைத் தொடர்ந்து கடத்தப்பட்டவர்களை விடுவிக்கும் முயற்சியில் பல்கலைக்கழகத் துணை வேந்தர் ஈடுபட்டபோதும், கடந்த வியாழக்கிழமை கடத்தப்பட்ட மூவரும் கிதுலதெனிய தோட்டப் பகுதியிலிருந்து அடிகாயங்களுடன் உருக்குலைந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளனர்.

### ஆரோக்கிய

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

கைகளை நிலத்தில் அமர்ந்தபடி வைத்துக் கொள்ள வேண்டும். கால்களை மேலே தூக்கி சுவாசத்தை உள் இழுத்து கால்கள் இரண்டும் தலைக்குப் பின்புறம் போகும் போது சுவாசத்தை வெளி விடவும். கால்கள் மடங்காமல் பெருவிரல்கள் நிலத்தில் முட்டியிருக்க வேண்டும். முட்டியபடி 4 சுவாசம் உள் வெளி விட்டபடி இருந்து பின் 4வது சுவாசத்தை உள்ளிழுத்தபடி கால்களை மேல் தூக்கியபடி சுவாசத்தை விட்டுக் கொண்டு முன் பக்கம் நிலத்தில் அமர்த்தி விடவேண்டும். இதேமாதிரி 4 தடவைகள் செய்து ஓய்வு எடுக்க வேண்டும். இதன் பலனை நாளைய இதழில் பார்ப்போம்.

சுவாமினி ஸ்ரீ சிதானந்தயோகி

## பழுதடைந்த எக்ஸ்ரே கருவி கொழும்பு செல்கிறது

(யாழ்ப்பாணம்)

யாழ். ஆஸ்பத்திரியில் பழுதடைந்த நிலையிலிருக்கும் எக்ஸ்றே கருவிகளைத் திருத்துவதற்கான பணிகளை அதிகாரிகள் தற்பொழுது தீவிரமாக மேற்கொண்டு வருகின்றனர்.

இதன் முன்னோடியாகப் பழுதடைந்த நிலையில் இருந்த, நகர்த்தமுடியாத நோயாளிகளை அவர்கள் இருக்கும் வார்ட்டிற்குச் சென்று படம் எடுக்கக்கூடிய எக்ஸ்றே கருவி ஒன்று நேற்றுக் கொழும்பிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மேலும் பழுதடைந்த நிலையிலுள்ள ஏனைய எக்ஸ்றே கருவிகளையும் திருத்தியமைக்கும் முயற்சிக்கு கொழும்பில் சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்புகொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (கு)

## ப. நோ. கூ. சங்கத்தில் உணவுப் பொருட்கள் கொள்ளை

(புங்குடுதீவு)

புங்குடுதீவு மடத்துவெளி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கடை யன்னல்கள் உடைக்கப்பட்டு அங்கிருந்து அத்தியாவசியப் பொருட்களான மா, சீனி போன்றவையும் குழந்தைகளுக்கான பால்மா பைக்கற்றுகள் மற்றும் பல பொருட்களும் இனந் தெரியாதவர்களால் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

கொள்ளையடித்துச் செல்லப்பட்ட பொருட்களின் பெறுமதி சுமார் 21 ஆயிரம் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.

## மந்திகைசந்தியில் இளைஞர் பலி

(பருத்தித்துறை)

புலோலி மந்திகைச் சந்தியில் இளைஞர் ஒருவர் நேற்று காலை இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

துன்னாலையைச் சேர்ந்த வீ. ஸ்ரீஸ்கந்தராஜா (வயது 36) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவரென பின்னர் அடையாளம் காட்டப்பட்டது.

மந்திகைச் சந்தியில் வழமை போல் இவர் வேலைசெய்து கொண்டிருந்தபோதே இவர் சுட்டுக் கொல்லப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

### ரூ. 10 கோடி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

(இந்திய ரூபா) பெறுமதியான இந்தப் போதை வஸ்துக்கள் ஜமுனா நதிக் கரையில் வைத்துத் தீக்கிரையாக்கப்பட்டது. 700 கிலோ ஹஸிஸ், 600 கிலோ ஹரோயின். 71 கிலோ கஞ்சா உட்பட வேறும் பல போதை வஸ்துக்களும் அழிக்கப்பட்டன.

### படையினர்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

டம் பாதிக்கும்.

அத்துடன் குற்றச்சாட்டுக்களோ, விசாரணைகளோ எதுவுமின்றி நீண்ட காலமாகத் தடுத்து வைத்திருப்பவர்களையும் அந்தச் சட்டம் பாதிக்கும்.

சட்டவிரோதமாகத்தடுத்து வைக்கப்பட்டிருத்தல், சித்திரவதை அல்லது கொடுமையாக நடத்தப்படல் என்ற குறைகளைச் சுட்டிக்காட்டி தாக்கல் செய்யப்பட்டிருக்கும் சிறைக் கைதிகளின் மனித உரிமை மனுக்களும் இதன் மூலம் பாதிக்கப்படும்.

படையினரைப் பாதுகாக்கும் சட்டம் சர்வதேச மனித உரிமைகள் தரத்திலிருந்து மாறுபட்டதாகவே இருக்கிறது.

இந்தச் சட்டத்தை நீக்கி விடும்படி சர்வதேச மன்னிப்புச்சபை இலங்கை அரசாங்கத்தை ஏற்கனவே கேட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

## இன்று கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

''தொழில் பார்க்கும் பெண்களும், அவர்கள் பிரச்சினைகளும் எதிர்பார்ப்புகளும்'' என்னும் தலைப்பிலான கருத்தரங்கு இன்று பண்டத்தரிப்பு யசிந்தா மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

மகளிர் அபிவிருத்தி நிலைய இயக்குனர் திருமதி சரோஜா சிவச்சந்திரன் தலைமையில் நடைபெறும் இக்கருத்தரங்கில் வலிகாமம் தென் மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த 50 பெண்கள் பங்குபற்ற உள்ளனர்.

### மூன்று

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சோதனை பிரதிக் கல்விப் பணிப்பாளரின் தலைமையில் இப்போது நடைபெற்றுவருவது தெரிந்ததே.

கோட்டக்கல்வி அலுவலக மட்டக்குழுப் பரிசோதனையும் முன்அறிவிப்பு இன்றி செய்வாய், வியாழன்ஆகிய தினங்களில் நடைபெற இருக்கின்றன. இக்குழுவில் சிரேஷ்ட கல்வி அதிகாரி, சொத்தணி அதிபர், சிரேஷ்ட அதிபர், சேவைக்கால ஆலோசகர்கள் ஆகியோர் அடங்குவர். இவ்வாறே கொத்தணி மட்டத்திலும் குழுப்பரிசோதனைகள் நடைபெற இருக்கின்றன.

### முறைசாராக்கல்வி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

காட்டப்பெற்றது.இருந்துதல் மின் ஒட்டுவேலை ஆகியதுறைகளில் பயிற்சி பெறுவதற்கு பயிற்சியாளர்கள்சேர்த்துக்கொள்ளப்படவிருக்கிறார்கள்.

பயிற்சியாளர்கள் விண்ணப்பப்பத்திரம், மற்றும் சான்றிதழ்களுடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளுமாறு கல்வியதிகாரி திரு. ச. சுப்பிரமணியம் கேட்டுள்ளார்.

## வெளியீட்டுவிழா

'வாழ்வின் வெற்றி கையில்' என்னும் நூல் வெளியீட்டு விழா இன்று நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய ஸ்வாமிகள் தலைமையில் நடைபெறவுள்ளது.

# மரண அறிவித்தல்

## ஆசிர்வாதம் றேமான்

(இளைப்பாறிய கலால் உத்தியோகத்தர்)

இல. 27, 2-ம் குறுக்குவீதி குருநகரைச் சேர்ந்த ஆசிர்வாதம் றேமான் 9-6-89 அன்று காலமாகிவிட்டார், இவர் செல்வராணியின் அன்புக் கணவரும் காலம்சென்ற ஆசீர்வாதம், மருகிருதா ஆகியோரின் அன்புப் புதல்வரும், காலம்சென்ற அந்தோனிப்பிள்ளையின் அருமைச் சகோதரனும், இம்மக்குளேற்று, கிறிஸ்ரியன் (பிரான்ஸ்), ஜெயரட்ணசிங்கம், லூர்த்துநாயகி, கிளிபேட் (சீநோர்), ஒலிவர்(மாநகரசபை), அன்ரனி (கிராமசேவை அலுவலர் குருநகர்), ஜெயசீலி ஸ்ரனிஸ்லோஸ், டயஸ் (பிரான்ஸ்) ஆகியோரது அன்புத் தந்தையும், புஸ்பராணி, கமலா, இராயப்பு (சுவிட்ஸலாந்து), ராஜேஸ், ராணி, கொன்சி, பீலிக்ஸ் (விளையாட்டுத்துறை அதிகாரி சங்கானை), ஆகியோரின் அன்பு மாமனாரும், கோல்றிச், ராஜ்குமார், நந்தா, நிமல்டா, ஜெயேந்திரன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரது பூதவுடல் இன்று (11-06-89) ஞாயிற்றுக்கிழமை பி. ப. 4-30 மணிக்கு பரிசுத்த கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும். ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
றே. அன்ரனி
(மகன்)

(சி. 2943)

## திருமதி றேசலின் அந்தோனிப்பிள்ளை

திருமதி றேசலின் அந்தோனிப்பிள்ளை காலமானார். அன்னார் அச்சுவேலியைச் சேர்ந்த காலஞ்சென்ற சிங்கராசா அந்தோனிப்பிள்ளையின் மனைவியும், ஞானப்பிரகாசத்தினதும், காலஞ்சென்ற நேசத்தினதும் சிரேஷ்ட புதல்வியும், செல்வராசா, ஜோசப் (Post Master C. M. E.) ஜெயம் ஆகியோரின் சகோதரியும், புனிதம் கில்வின் (Engineer U. K.), பெனிட்டா (France), மெற்றின் (Canada), சுசி (Switzaland), டொறக்ஸ், மதி, யூட் (Canada), சோபி (Canada), ரொசிஸ்டன் (St. Patricks College, Jaffna) ஆகியோரின் அன்புத் தாயாரும், குணரெத்தினம் (Maneging Director of G.P.N. Construction Company Ltd), மனோகரன் (France), மரியநாயகம் (Canada), விஜயரெட்ணம் (Switzaland) ஆகியோரின் அருமை மாமியாரும், நன்சி, நர்கிஷ், சயில ஜா, சகுந்தா, அன்ரனி, அனுரியன் ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
திரு. S. J. குணரெத்தினம்

''ரோஸ் மஹால்'', அச்சுவேலி.

(சி. 2944)

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1989ம் ஆண்டு ஜூன் மாதம் 11-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper atthe Genenral Post Office Sr iLanka under number B/1003e6/81. Eelanadu P. O. Box No: 49. Telegram, Eelanadu. Telephone; 22389. 24126.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org